வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 01.11.2021 திங்கட்கிழமை | இதழ் : 331 | பக்கங்கள் : 16




# 13 குறித்து ஆராய்வதற்காக நாளை யாழில் கூடுகின்றன தமிழ் கட்சிகள்

## மனோ, ஹக்கீமும் பங்கேற்பர் | தமிழ் அரசு கட்சி பங்கேற்காது

யாழ்ப்பாணம், நவம்பர் 01

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துமாறு இந்தியாவை கோருவது தொடர்பிலும், 13ஆவது திருத்தத்தில் மேலதிகமாக அதிகாரங்களை பெறுவதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்வதற்காகவும் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன கூடிப் பேசவுள்ளன. 15

## ஒத்திவைக்குமாறு கோரினோம்!

### இலங்கை தமிழ் அரசு கட்சி தலைவர் விளக்கம்

யாழ்ப்பாணம், நவ. 01

13 தொடர்பில் யாழ்ப்பாணத்தில் தமிழ் கட்சிகள் கூடி ஆராயவுள்ள கூட்டத்தை ஒத்தி வைக்குமாறு கோரினோம். அது சாத்தியப்படவில்லை. இதனாலேயே அந்தக் கூட்டத்தில் நாம் பங்கேற்கவில்லை என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ. சேனாதிராசா கூறியுள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்குமாறு இந்தியாவை கோருவது தொடர்பிலான ஆராயும் கூட்டத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சி பங் 15

## கடும் மழையால் 247 பேர் யாழ்ப்பாணத்தில் பாதிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 01

கடும் மழையுடனான மோசமான காலநிலை தாக்கத்தால் 69 குடும்பங்களை சேர்ந்த 247 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் என். சூரியராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக மழையுடன் கூடிய 15

## 6 ஆயிரம் பேருந்துகள் இன்றுமுதல் சேவையில்!

கொழும்பு, நவ. 01

மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை நேற்று தளர்த்தப்பட்ட நிலையில் இன்று முதல் அதேவேளையில் 6 ஆயிரம் பேருந்துகளும், 152 அலுவலக ரயில் சேவைகளும் நாடு முழுவதும் சேவையில் ஈடுபடவுள்ளன என்று போக்கு வரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

மேலும், ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அதிகமான பயணிகளை 15

## விபத்தில் முதியவர் பலி!

தென்மராட்சி, நவ. 01

சைக்கிளில் பயணித்த முதியவரை அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் உயிரிழந்தார்.

ஏ-9 வீதியில் - கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் 15

## பூஸ்டர் டோஸ் வழங்கல் இன்று ஆரம்பமாகின்றது

### சுகாதார சேவைகள் பணிப்பாளர்

கொழும்பு, நவ. 01

கொரோனா தொற்றை தடுப்பதற்கான தடுப்பூசியின் பூஸ்டர் டோஸ் ஏற்றும் நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

முதல் கட்ட தடுப்பூசிகள், சுகாதார தரப்பினருக்கே வழங்கப்படவுள்ளன. மூன்றாவது தடுப்பூசியான - பூஸ்டர் டோஸ் 15

## வவுனியாவில் 31 பேர் உட்பட வடக்கில் 40 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், நவ. 01

வடக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை திடீரென உயர்ந்துள்ளது. வவுனியா மாவட்டத்தில் 31 பேர் உட்பட 40 பேர் நேற்று தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் 15

## மேலும் 18 பேர் மரணம்

கொழும்பு, நவ. 01

கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 18 பேர் உயிரிழந்தனர் என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. இவர்கள் நேற்று முன்தினம் மரணமடைந்தவர்களாவர்.

10 ஆண்களும் 08 பெண்களும் உயிரிழந் 15

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

## ஏன் கொல்லப்பட்டனர் என்பதை அறியும் உரிமை எமக்கு உள்ளது

### மீண்டும் வலியுறுத்துகின்றார் பேராயர்



கொழும்பு, நவ. 01

"உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பெருந்தொகையான மக்கள் கொல்லப்பட்டமைக்கு காரணம் என்ன என்பதைத் தெரிந்துகொள்வதற்கான உரிமை மக்களுக்கு உள்ளது" என வலியுறுத்தியுள்ள கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், "இது எமது உரிமை" எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்டுவாப்பிட்டி, சென் செபஸ்டியன் தேவாலயத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் 15




**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# தனியார் கல்வி நிலையங்களை 16ஆம் திகதி ஆரம்பிக்க அனுமதி

கொழும்பு, நவ. 01

க. பொ. த. சாதாரண தர, உயர்தர மாணவர்களுக்கான தனியார் வகுப்புக்களை எதிர் வரும் 16ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், வகுப்பறையின் திறனுக்கு அமைய 50 வீதமான மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சுகாதார வழிகாட்டல்கள் தொகுப்பு நேற்று முன்னதினம் சுகாதார பணிப்பாளர் மருத்துவர் அசேல குணவர்த்தனவால் வெளியிடப்பட்டது.



## இடர் நெருக்கடி காலத்தில் பிள்ளைகளை பெற்றோர் சரியாக வழிநடத்த வேண்டும்

### முன்பள்ளி நிகழ்வில் டான் செய்தியாசிரியர்

யாழ்ப்பாணம், நவ. 01

இடர் காலத்தில் பிள்ளைகளை பெற்றோர் சரியாக வழிநடத்த வேண்டும் என டான் தொலைக்காட்சியின் செய்தி ஆசிரியர் திருமதி மாலினி அஜந்தன் தெரிவித்தார் .

நேற்று திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் முன்பள்ளி நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது நாட்டில் உள்ள கொரோனா தொற்று அச்ச சூழ்நிலைலையால் மைதானங்கள் மண்டபத்துக்கு நகர்கின்றன. தற்போதுள்ள கொரோனா இடர்நிலை காரணமாக விளையாட்டுப் போட்டிகள் மண்டபங்களில் மட்டுப்படுத்தப்பட்டவர்களோடு இடம்பெறுகின்றது.

எனினும், பிள்ளைகள் தமது விளையாட்டு திறனை மேம்படுத்துவதற்கு பெற்றோர் தம் மாலான பங்களிப்பை வழங்க வேண்டும். எந்நேரமும் கற்றலை மட்டும் ஊக்குவிக்காது விளையாட்டுத் துறையிலும் பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டும்.

அத்தோடு கொரோனா இடர் காலத்தில் வீடுகளில் பிள்ளைகள் இருக்கும் போது பிள்ளைகளை சரியான முறையில் வழிப்படுத்தல் வேண்டும். அதாவது ஏட்டுக்கல்வி மட்டும் புகட்டாது ஏனைய பாடவிதான செயல்பாடுகளிலும் பிள்ளைகளை உட்புகுத்தி அவர்களை பல்நோக்கு சிந்தனை உள்ளவர்களாக வளர்க்க முன்வர வேண்டும்.

முன்பள்ளிகள்தான் ஒரு பிள்ளையின் அடிப்படை கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றுகின்றன. அந்த வகையில் பிள்ளைகளின் கல்விக்கு அடித்தளமிடுவதில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மிகப்பெரிய பங்குள்ளது. முன்பள்ளி ஆசிரியர் என்பவர் ஒரு பிள்ளையின் வாழ்க்கையின் அடித்தளத்தை போடுபவர். எனவே, ஆசிரியர்களும் பிள்ளைகளை சரியான முறையில் வழிநடத்தி சிறந்த எதிர்கால சந்ததியினராக்க முன்வரவேண்டும்- என்றார். (ஐ)

## மின்னல் தாக்கி சிறுவன் மரணம்!

புத்தளம், நவ. 01

புத்தளம், ஆனமடுவ பகுதியில் நேற்று முன்தினம் மின்னல் தாக்குதலுக்கு உள்ளான சிறுவன் ஒருவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

ஆனமடுவ, பாலியாகம பகுதியைச் சேர்ந்த 6 வயதுடைய சிறுவன் ஒருவனே இவ்வாறு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த குறித்த சிறுவன் தனது தாத்தாவுடன் வயலுக்குச் சென்ற போதே இவ் வாறு மின்னல் தாக்குதலுக்கு உள்ளானார் என்று தெரிவிக்கப்பட்டது.

## கனகாம்பிகை குளம் வான் பாயும் அபாயம்!

கிளிநொச்சி, நவ. 01

வடக்கில் தொடரும் மழையினால் கிளிநொச்சியின் கனாம்பிகைக்குளம் வான்பாய்வற்கான சாத்தியம் காணப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

இதனால் கனகாம்பிகைக் குளத்தின் நீர் வெளியேறும் தாழ் நிலப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயல்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## ஆயுதங்களுடன் சிக்கியோருக்கு விளக்கமறியல்!

வடமராட்சி, நவ. 01

வல்வெட்டித்துறை நெடிய காடு பகுதியில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட 12 பேரையும் விளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

கூரிய ஆயுதங்கள் போதைப் பொருள் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் பன்னிரண்டு பேர் இராணுவத்தால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போதே விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.(ஐ-02)

# அரசுக்குள் இருந்து கூச்சலிடாமல் பங்காளிகள் வெளியேற வேண்டும்!

கொழும்பு, நவ. 01

அமைச்சரவை அமைச்சர்களுக்குகூட தெளிவுபடுத்தப்படாமல் கெரவலப்பிட்டி ஒப்பந்தம் போன்ற முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. இவ்வாறான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்போது அதனை எதிர்க்கும் அமைச்சர்கள் அரசாங்கத்திற்குள் இருந்து கூச்சலிட்டுக் கொண்டிருக்காமல், அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிர்ப்பை வெளியிட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

ஆளும் தரப்பின் பங்காளி கட்சிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான முரண்பாடு தொடர்பில் கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷவிற்கு வாக்களிக்க வேண்டாம் என்று கூறிய முதலாவது நபர் நான் ஆவேன். 40 வருடங்களுக்கும் அதிக அரசியல் அனுபவத்தின் ஊடாகவே நான் அதைக் கூறினேன். குறைந்த பட்சம் பிரதேசசபை உறுப்பினராகக் கூட சேவையாற்றிய அனுபவம் கூட அற்ற அவரால் எவ்வாறு நாட்டை முறையாக நிர்வகிக்க முடியும்? அன்று என்னை தூற்றிய மக்கள் இன்று நான் கூறியது சரி என்று ஏற்றுக் கொண்டுள்ளனர் என்றும் சொன்னார்.

(ஐ)

## வடமாகாண மரநடுகை மாதம் 01 கார்த்திகை 2021

"மரங்களை நாட்டுவதற்கான மிகச்சிறந்த காலம் 20 வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்."

- சீனப் பழமொழி

### கல்வி TV CHANNEL-1 — 01.11.2021 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி TV CHANNEL - 2 — 01.11.2021 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
01.11.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

## பௌத்த குடியரசு - நெருங்கும் ஆபத்து?

சில தினங்களுக்கு முன்னர் இந்திய தூதுவர் கோபால் பாக்லே, கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை சந்தித்திருந்தார். இந்த சந்திப்பின்போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கையை ஒரு பௌத்த குடியரசாக பிரகடனம் செய்ய முயற்சிக்கிறாரென சம்பந்தன் கூறினாரென்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இது தொடர்பில் ‘ஈழநாடு’ ஏற்கனவே தெளிவான எச்சரிக்கைகளை செய்திருக்கின்றது. இதன் காரணமாகவே தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் ஓரணியாக செயலாற்ற வேண்டுமென்றும் ‘ஈழநாடு’ தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருக்கின்றது.

புதிய அரசியல் யாப்பு தொடர்பான அறிவித்தலை ஜனாதிபதி அண்மையில் வெளிப்படுத்தியிருந்தார். இராணுவ நிகழ்வு ஒன்றின் போதுதான் அந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. இது பற்றி ஒரு பொதுவான அவதானம் உண்டு. அதாவது, பொதுஜன பெரமுன அரசாங்கம் இலங்கையை பௌத்த சோசலிச குடியரசாக பிரகடனம் செய்ய முற்படுகின்றதா என்னும் சில சந்தேகங்கள் ஆங்காங்கே வெளியிடப்பட்டு வருகின்றன. ஏற்கனவே ஜனாதிபதி தன்னை ஒரு சிங்கள – பௌத்த தலைவன் என்றும் பிரகடனம் செய்திருக்கின்றார். அதேவேளை புதிய அரசியல் யாப்பிற்கு பிறிதோர் இலக்கும் உண்டு. அதாவது, யாப்பின் மூலம், தமிழ் மக்களுக்கான விசேட சலுகைகள் வழங்குவதை முற்றிலுமாக இல்லாமலாக்குவது. இந்த அடிப்படையில் 13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக தமிழ் மக்களுக்கு கிடைக்கப்பெற்ற ஓரளவான சலுகைகளையும் இல்லாமலாக்குவது. இந்திய பிரதமர் நரேந்திர மோடி, காஷ்மீருக்கு வழங்கிய சிறப்பு சலுகையை நீக்கியதை ஓர் உதாரணமாக எடுத்துக் கொள்வது. அப்படி செய்கின்றபோது இந்தியாவையும் சமாளிக்கலாம் என்று அரசாங்கம் ஒரு கணக்கை போடக்கூடும்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர், கூட்டமைப்பை சந்தித்தபோது, ஒரு விடயத்தைத் தெளிவாக சுட்டிக் காட்டியிருந்தார். அதாவது, 13ஆவது விடயத்தில் நாங்கள் தலையீடு செய்ய முடியும். ஆனால், புதிய அரசியல் யாப்பு என்றால் அது சிக்கலானது. ஏனெனில், ஒரு நாட்டின் அரசியல் யாப்பு என்பது முற்றிலும் உள்விவகாரம். இதனை கருத்தில் கொண்டுதான் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஒரு விடயத்தை கூட்டமைப்பிடம் வலியுறுத்தியிருந்தார். அதாவது, ஆகக் குறைந்தது 13ஆவது திருத்தச் சட்டத்திலாவது தமிழ் கட்சிகள் ஒன்றுபட வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தார். இந்த அடிப்படையிலேயே தற்போது தமிழ்த் தேசியக் கட்சிகள் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றன. இதில் சில முன்னேற்றங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

இதிலுள்ள வேடிக்கையான விடயம் என்னவென்றால், அரசாங்கம் பௌத்த குடியரசை நோக்கி நகர்வதாக குற்றம்சாட்டும் சம்பந்தன் – சுமந்திரன் – மாவை கூட்டு, பிறிதொருபுறம் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் நம்பிக்கையும் வெளியிட்டு வருகின்றது. ஒரு பௌத்த குடியரசை பிரகடனம் செய்வதில் அக்கறையாக இருக்கும் அரசாங்கத்திடமிருந்து சம்பந்தன் என்ன வகையான அரசியல் தீர்வை எதிர்பார்க்கின்றார்? நிலைமைகள் தெளிவாகத் தெரிகின்ற போதும் – ஏன் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான உரையாடல்களை தொடர்ந்தும் தமிழ் அரசு கட்சி புறக்கணித்து வருகின்றது?

இதேவேளை தாயகத்தில் மேற்கொள்ளப்படும் அரசியல் முன்னெப்புக்களை எப்படியாவது, குழப்ப வேண்டுமென்னும் வகையில், புதிய அரசியல் சமையல்காரர்களின் தலைகளும் ஆங்காங்கே எட்டிப் பார்க்கின்றன. இந்த அடிப்படையில், அண்மையில் எட்டிப் பார்க்கும் ஒன்றுதான் கருத்துக்கணிப்பு. அதாவது, இந்தியாவிற்கு எதைக் கூற வேண்டும் என்னும் அடிப்படையில் தங்களுக்கு தெரிந்தவர்கள் சிலரை வலிந்து இணைத்துக் கொண்டு, கருத்துக் கணிப்பு என்னும் பெயரில் புதிய குழப்பங்களுக்கான அத்திபாரம் இடப்படுகின்றது. 13ஆவது திருத்தம் தேவையில்லை என்னும் குரல்கள் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து வரவேண்டும் என்பதைத்தான், அரசாங்கமும் விரும்புகின்றது. அப்போதுதான், தங்களின் நிகழ்ச்சிநிரலை இலகுவாக முன்னெடுக்க முடியுமென்று அவர்கள் நம்புகின்றனர். நமது சூழலில் – தெரிந்தோ தெரியாமலோ, சிலர் இதற்கு பலியாகின்றனரா?

# ஜனாதிபதி கோட்டாபயவின் ஸ்கொட்லாந்து விஜயம் !

**- அலசுவது இராஜதந்திரி -**



ஐக்கிய இராச்சியம் (United Kingdom) என்பது வேல்ஸ், ஸ்கொட்லாந்து, வட அயர்லாந்து , இங்கிலாந்து ஆகிய பிராந்தியங்களை உள்ளடக்கிய ஒரே தேசமாக இருக்கின்ற பிரித்தானியாவையே குறித்து நிற்கின்றது.

ஐக்கிய இராச்சியம்கூட வட அயர்லாந்து மற்றும் ஸ்கொட்லாந்து, வேல்ஸ் போன்றவற்றிலிருந்து பிரிவினை குறித்த சவால்களை எதிர்நோக்கியிருந்தது.

வட அயர்லாந்து பிரிவினைவாத பிரச்னை காரணமாக பிரிட்டன் நிறையவே விலை கொடுத்திருந்தது. இந்தியாவில் பிரித்தானியாவின் இறுதி மகா தேசாதிபதியாக இருந்தவரும் பரிட்டிஷ் அரச குடும்பத்தைச் சேர்ந்தவருமான மவுன்ட் பேட்டன் பிரபுகூட வட அயர்லாந்து பிரிவினைவாத கெரில்லாக்கள் நடத்திய குண்டுத் தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக பாராளுமனறங்களின் தாயகம் என்று வர்ணிக்கப்படுமளவுக்கு ஜனநாயக நாடாக இருக்கும் பிரிட்டன் வடஅயர்லாந்து பிரிவினைவாத கெரில்லாக்களை இராணுவ ரீதியாகக் கையாண்ட போதிலும், அரசியல் ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுத்து இறுதியில், வடஅயர்லாந்துக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கி 1998ஆம் ஆண்டில் பிரிவினை கோரிக்கையை பிரிட்டன் முடிவுக்கு கொண்டுவந்திருந்தது.

ஸ்கொட்லாந்து பிரிவினைக் கோரிக்கை கூட முனைப்படைந்து பிரிட்டனுக்கு அரசியல் ரீதியான சவாலை விடுத்திருந்தது. ஆயினும், பிரிட்டனின் ஆட்சியாளர்கள் குறிப்பிடத்தக்களவு அதிகாரப் பரவலாக்கத்தை ஸ்கொட்லாந்துக்கு வழங்கியதையடுத்து ஸ்கொட்லாந்து பாராளுமன்றில் பிரிவினைவாத கோரிக்கை, வாக்கெடுப்பில் தோல்வி கண்டிருந்தது.

ஆம்-இல்லை (Yes - No) என்ற கோரிக்கைகள் ஸ்கொட்லாந்து பிராந்திய பாராளுமன்றில், ஸ்கொட்லாந்து பிரிவினை தொடர்பாக 1994ஆம் அண்டு முன்வைக்கப்பட்டு இறுதியில் இல்லை ஆதாவது ஸ்கொட்லாந்து பிளவுபட வேண்டியதில்லை என்பதை ஸ்கொட்லாந்து பாராளுமன்றம் தீர்மானித்து தனக்குரிய அதிகாரப் பரவலாக்கத்தை மேலும் விரிவாக்குவதன் மூலம் பிட்டனுடன் ஐக்கியமாக இருக்கவே முன்வந்திருந்தது.

ஸ்கொட்லாந்து பாராளுமன்றம் பிரிவினைக்கு எதிராக வாக்களித்தது என்று குறிப்பிடுவதைவிட பிரித்தானிய அரசு ஸ்கொட்லாந்து பிரிந்து சென்றுவிடாத வகையில் அந்தப் பிராந்தியத்துக்கு அதிகாரப் பரவலாக்கத்தை விரிவாக மேற்கொண்டிருந்தது எனக் குறிப்பிடுவதே பொருத்தமானதாக இருக்கும்.

வட அயர்லாந்து ஐரிஷ் கெரில்லாக்கள் பிரத்தானிய அரசுக்கு எதிராக ஷின் பெயின் போராட்ட அமைப்பு மூலமாக பல தசாப்த காலங்கள் இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

ஐரிஷ் போராட்ட நடவடிக்கைகளுக்கு ஜெரி அடம்ஸ் என்ற ஐரிஷ் போராளி தலைமை தாங்கியிருந்தார். பின்னர் தொடர்ச்சியான யுத்த நடவடிக்கைகளால் இரத்தமே தொடர்ந்து சிந்தப்பட்டுக்கொண்டிருக்கும் என்பதை அறிந்தவராக அரசியல் நடவடிக்கைகளில் இறங்கி வட அயர்லாந்து பிரச்னைக்கு சுமுக தீர்வை ஜெரி அடம்ஸ் 1998ஆம் ஆண்டு கண்டிருந்தார்.

இதனையடுத்து 2014ஆம் ஆண்டு செப்ரெம்பரில் ஸ்கொட்லாந்து பிரிவினைவாதக் கோரிக்கையும் கூடுதல் அதிகார பரவாலாக்கத்தை பெற்றதையடுத்து ஸ்கொட்லாந்து பாரளுமன்றினால் நிராகரிக்கப்பட்டிருந்தது.


இன மற்றும் மானிட பண்பாட்டுடன் சம்பந்தப்பட்ட வேறுபாடுகள் ஒருநாட்டில் காணப்படும்போது அதனை இராணுவ ரீதியாக ஒடுக்குவதை விடுத்து அரசியல் ரீதியாகக் கையாளுவதன் மூலமே ஆரோக்கியமான நீண்ட கால தீர்வுகளை எட்டமுடியும் என்பதற்கு பிரிட்டனில் வட அயர்லாந்து மற்றும் ஸ்கொட்லாந்து ஆகிய பிராந்தியங்கள் நல்ல முன்னுதாரணங்களாக இருக்கின்றன.

ஸ்கொட்லாந்தின் தலைநகராக இருக்கும் கிளாஸ்கோவில் (Glaxo) இடம்பெறுகின்ற உலகில் காலநிலை மாற்றம் சம்பந்தப்பட்ட மகாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஸ்கொட்லாந்து சென்றுள்ளார்.

பல்வேறு இன, மத, மொழி ரீதியான வேறுபாடுகளைக் கொண்டுள்ள நாடுகளில் உள்நாட்டுப் பிரச்னைகள் காணப்படுகின்றபோதிலும் ஜனநாயக ரீதியாக மேம்பட்ட நாடுகளில் பெரிதும் அப்பிரச்னைகள் அரசியல் ரீதியாகவே தீர்க்கப்படுகின்றன என்பதற்கும் சிறந்த முறையிலான அதிகாரப் பரவலாக்கம் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் பிரிவினைக் கோரிக்கையை கைவிட்டு மக்கள் ஐக்கியத்துடன் ஒரே நாடு என்ற ரீதியில் வாழ முன்வருவார்கள் என்பதற்கு ஐக்கிய இராச்சியத்தின் ஸ்கொட்லாந்து ஒரு நல்ல உதாரணமாக இருக்கின்றது.

எனவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஸ்கொட்லாந்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்தத் தருணத்தில் உலக பாராளுமன்றங்களின் தாயகமாக இருக்கின்ற பிரிட்டனில் ஸ்கொட்லாந்து எவ்வாறு விரிவான அதிகாரப் பரவலாக்கத்துடன் காணப்படுகின்றது என்பதையும் அறிந்து கொள்ள முடியும் என்றே கருதலாம்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு

நவம்பர் - 01 திங்கட்கிழமை
பிலவ வருடம் - ஐப்பசி - 15
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : துவாதசி




**மேடம்**
நன்மைகள் நடைபெறும் நாள். போட்டி, பொறாமை நீங்கும். எடுத்த விஷயத்தை எளிதில் முடித்து நிம்மதி காண்பீர்கள். மற்றவர் பொறாமையால் ஏற்பட்ட பிரச்னைகள் சுலபமாக தீரும்.

**இடபம்**
முயற்சியில் இனிய திருப்பம் உண்டாகி உங்களை மகிழ்விக்கும். வழக்கமான பணியில் திடீர் மாற்றத்தைச் செய்து வெல்வீர்கள். அலைச்சல் அதிகமாகும். ஆதாயம் கிடைக்கும்.

**மிதுனம்**
முயற்சியில் நீங்கள் நினைத்ததைவிட தாமதமான பலன் கிடைக்கும். நேர்மையாக வியாபாரம் செய்து மகிழ்வீர்கள். சிறப்பு குணத்தால் பல விஷயங்களில் வெற்றி பெறுவீர்கள்.

**கடகம்**
உங்களுக்கு பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். முன்பைவிட ஆரோக்கியம் சீராகும். முடிவுக்கு வராமல் இழுபறியாக இருந்த விஷயம் சுமுகமாக முடியும்.

**சிம்மம்**
பணியில் ஏற்பட்ட தொய்வு அகலும். நட்பு வட்டம் விரியும். உணர்ச்சிகளையும், கோபத்தையும் கட்டுப்படுத்திக் கொள்வீர்கள். தொழிலில் நிலைமைகள் மேம்படும். லாபம் கிடைக்கும்.

**கன்னி**
கொடுத்த வாக்கை காப்பாற்றி நல்ல பெயரை எடுப்பீர்கள். மனதில் ஏதேனும் கவலை உண்டாகி அது இன்றே தீரும். உடற்சோர்வு வரலாம். வாகனம் தொடர்பான செலவுகள் குறையும்.

**துலாம்**
புதிய நபர்களின் அறிமுகம் கிடைத்து அவர்களால் நன்மையும் உண்டாகும். கலகலப்பான நிகழ்வுகளில் பங்கேற்று மகிழ்ச்சி அடைவீர்கள். கடந்த சில நாட்களாக இருந்த பிரச்னைகள் நீங்கும்.

**விருட்சிகம்**
வியாபார விருத்திக்கு உங்கள் பேச்சு கைகொடுக்கும். பொழுதுபோக்கான விஷயங்களில் மனம் ஈடுபடும். முன்பு ஏற்பட்ட சிக்கல்களில் இருந்து இன்று விடுபடுவீர்கள்.

**தனுசு**
பணியிடத்தில் சலுகைகள் கிடைக்கும். பொருளாதார பிரச்னை குறையும். தடைபட்டிருந்த பணிகளை இன்று நல்லபடியாக முடிப்பீர்கள். நண்பர்களின் ஒத்துழைப்பினால் ஆதாயம்.

**மகரம்**
ரகசியத்தைப் பரப்பினால் பிரச்னை உருவாகக் கூடும். கவனம் தேவை. உறவினர் பகை அகலும். உடன்பிறப்புகளின் ஆதரவு கிடைக்கும். மற்றவர்களுடைய மனம் நோகாதபடி பேசுங்கள்.

**கும்பம்**
திட்டங்கள் வகுப்பதில் அலட்சியம் காட்டாதிருப்பது நல்லது. செலவுகளால் தடுமாற்றம் ஏற்படாமல் உறுதியாக இருங்கள். பயணங்களை முன் கூட்டியே சரியாகத் திட்டமிடுவது நல்லது.

**மீனம்**
தன்னம்பிக்கை அதிகரிக்கும். வாய்க்கு ருசியான உணவு கிடைக்கும். பணியிடத்தில் தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்க வேண்டும். உங்களின் அறிவுத்திறன் அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை ஏற்படும்.

# தமிழ்நாடு நாள் தொடர்பில் கலந்தாய்ந்தே முடிவு செய்க

## ஸ்டாலினிடம் திருமாவளவன் வேண்டுகோள்



*சென்னை, நவ. 01*

தமிழ்நாடு நாள் தொடர் பாக அரசாணை பிறப்பிப்பதற்கு முன்பு கலந்தாய்வு செய்து முடிவெடுக்க வேண்டும் என விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு என பெயர் சூட்டப்பட்ட ஜூலை 18 ஆம் திகதியை தமிழ்நாடு நாளாக கொண்டாட விரைவில் அரசாணை வெளியிடப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ள நிலையிலேயே திருமாவளவன் தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் இந்தியா முழுவதும் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அதனடிப்படையில் அப்போதைய மெட்ராஸ் மாகாணத்திலிருந்து ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளத்தின் சில பகுதிகள் பிரிந்து சென்றன. 2019 முதல் நவம்பர் 1ஆம் நாளை தமிழ்நாடு மாநில நாளாக அப்போதைய அரசு அறிவித்திருந்தது.

இந்நிலையில், பல்வேறு அரசியல் கட்சிகள், தமிழ் உணர்வாளர்கள், தமிழ் கூட்டமைப்பினர், தமிழ் அறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் என பலதரப்பிலும் நவம்பர் 1ஆம் நாள் எல்லை போராட்டத்தை நினைவு கூறும் நாளாகத்தான் அமையுமே தவிர தமிழ்நாடு நாளாக கொண்டாடுவது பொருத்தமாக இருக்காது என்றும், மெட்ராஸ் மாகாணம் என்று இருந்ததை மாற்றி முன்னாள் முதலமைச்சர் அண்ணாவால் 1968ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் நாள் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி தமிழ்நாடு என்று பெயரிடப்பட அந்த நாள்தான் தமிழ்நாடு நாள் என கொண்டாடப்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

பல்வேறு அமைப்புகளின் கோரிக்கைகளை கவனமாக பரிசீலித்து, தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு எனப் பேரறிஞர் அண்ணா பெயர் சூட்டிய ஜூலை 18ஆம் நாளினையே தமிழ்நாடு நாளாக இனி கொண்டாட அரசாணை விரைவில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், தமிழ்நாடு நாள் தொடர்பாக அரசாணை பிறப்பிப்பதற்கு முன்பு கலந்தாய்வு செய்து முடிவெடுக்க வேண்டும் என விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவில், “தமிழ்நாடு நாள் தொடர்பாக அரசாணை பிறப்பிப்பதற்கு முன்பு அனைத்துக்கட்சித் தலைவர்கள், எல்லைமீட்பு போராளிகள், இன உணர்வாளர்கள் மற்றும் தமிழறிஞர்கள் போன்றோரை அழைத்துக் கலந்தாய்வு செய்து முடிவெடுப்பது சாலச் சிறந்தது. இதை மாண்புமிகு முதல்வருக்கு எமது வேண்டுகோளாக முன்வைக்கிறோம்“ என கூறியுள்ளார்.

# ‘தமிழ்நாடு தினம்’ குறித்த தீர்மானத்தை ஏற்கமுடியாது என்கிறார் பன்னீர்செல்வம்

*சென்னை, நவ, 01*

ஜூலை 18ஆம் திகதி “தமிழ்நாடு நாள்” கொண்டாடப்படும் என்ற அறிவிப்புக்கு அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வம் கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும் முதலமைச்சரின் அறிவிப்பு பொருத்தமற்ற, மரபு மீறிய, உள்நோக்கம் கொண்ட, அரசியல் காழ்ப்புணர்ச்சியின் உச்சகட்ட செயல் என அவர் தெரிவித்துள்ளார்.



ஜூலை 18ஆம் திகதி “தமிழ்நாடு நாள்” என்ற அறிவிப்பை திரும்பப்பெற வேண்டும் எனவும், நவம்பர் 1ஆம் திகதியே தமிழ்நாடு நாளை தொடர்ந்து கொண்டாட முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளார்.

இந்தநிலையில் தி.மு.க.எம்.பி.,கனிமொழி கூறியதாவது:-

தமிழகத்தில் புதிய கல்வி கொள்கை அமுல்படுத்தப் படாது; முதல்வர் தனது கொள்கையில் இருந்து மாறமாட்டார். “தமிழ்நாடு”என பெயர் வைக்கப்பட்ட ஜூலை 18ஆம் திகதி “தமிழ்நாடு தினம்” கொண்டாடப்படுவது சரியாக இருக்கும் என்றார்.

# ரஜினியின் உடல்நிலை எவ்வாறுள்ளது? நேரில் பார்வையிட்ட மு.க.ஸ்டாலின்!

*சென்னை, நவ. 01*

உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ரஜினிகாந்திடம் நேரில் சென்று உடல்நலம் பற்றி விசாரித்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

வாழ்நாள் சாதனைக்கான ‘தாதா சாகேப் பால்கே’ விருது பெற்றது, தீபாவளி விருந்தாக திரைக்கு வரும் ‘அண்ணாத்த’ திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருப்பது என்ற இரட்டை சந்தோஷத்தில் இருந்த நடிகர் ரஜினிகாந்துக்கு கடந்த 28 ஆம் திகதி திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டது.

தலைவலி மற்றும் லேசான மயக்கம் காரணமாக சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள காவேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அவர் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மற்றும் உடல் முழு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதில், நடிகர் ரஜினிகாந்துக்கு மூளைக்கு செல்லும் ரத்தக்குழாயில் சிறிய அடைப்பு ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. அதனைத்தொடர்ந்து, அதை நீக்குவதற்கான முயற்சியில் மருத்துவர்கள் ஈடுபட்டனர். நேற்று முன்தினம் காலை சிகிச்சை மூலம் அடைப்பு சரிசெய்யப்பட்டது.

தற்போது, நடிகர் ரஜினிகாந்த் ஆஸ்பத்திரியிலேயே ஓய்வு எடுத்து வருகிறார். மருத்துவர்கள் கண்காணிப்பில் இருக்கும் அவரை, அவரது மனைவி லதா மற்றும் குடும்பத்தினர் உடன் இருந்து கவனித்து வருகின்றனர்.

இந்நிலையில் சென்னை ஆழ்வார்பேட்டியில் உள்ள காவேரி மருத்துவமனைக்கு சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நடிகர் ரஜினிகாந்திடம் உடல்நலம் பற்றி விசாரித்தார்.

# யாழ். - கொழும்பு ரயில் சேவை நாளை மறுதினம் ஆரம்பம்!



யாழ்ப்பாணம், நவ. 01

**யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவை நாளை மறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகும் என்று யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தின் பிரதான அதிபர் ரி. பிரதீபன் தெரிவித்துள்ளார்**

நாட்டில் கொரோனா தீவிர பரவலைத் தொடர்ந்து நாடு முழுவதும் தொடருந்து சேவைகள் நிறுத்தப்பட்டன. இந்த அடிப்படையில் யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவையும் நிறுத்தப்பட்டது.

இந்தநிலையில், நாளை மறுதினம் புதன்கிழமை கல்கிசை - காங்கேசன்துறை இடையிலான ரயில் சேவை ஆரம்பமாகின்றது. நாளை மறுதினம் கல்கிசையிலிருந்து புறப்படும் காலை 5.30 மணிக்கு புறப்படும் ரயில் காங்கேசன் துறையை வந்தடைந்து மறுநாளான வியாழக்கிழமை காலை 5.30 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும்.

எனினும், முற்பதிவு தொடர்பான தகவல்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை. நாளை மறுதினம் ரயில் சேவை வழக்கம்போல் இடம்பெறும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு ஒரு சேவையும் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ஒரு சேவையுமாக சாதாரண ரயில் சேவை மாத்திரமே முதலில் ஆரம்பிக்கப்படுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)



# வடக்கு முஸ்லிம் வெளியேற்றம் 31ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு!

யாழ்ப்பாணம், நவ. 01

வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றத்தின் 31 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு யாழ்ப்பாணம் ஒஸ்மானிய கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

யாழ். முஸ்லிம் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் 'வடக்கு முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் தமிழ் மக்களுக்கான தார்மீகக் கடமை' எனும் தொனிப்பொருளில் இந்த நினைவுகூரல் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாநகர சபை உறுப்பினர் யோகேஸ்வரி பற்குணராஜாவும், முஸ்லிம் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வின்போது முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுத்ததற்காக ஆணைக்குழு ஒன்று அமைக்க வேண்டும், 1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து அனுப்பப்பட்ட முஸ்லிம்கள் இழந்த சொத்துக்களைமீள வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (ஐ)

# நம்பிக்கை விதைப்பாக மரங்களை நாட்டுவோம்!

## ஐங்கரநேசன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ. 01

பொருத்தமான காலத்துக்காக நிலத்தின் கீழ் காத்துக் கிடக்கும் கார்த்திகை விதைகள் கார்த்திகை மாதத்தின் வரவோடு உறக்கம் கலைந்து புதுப்பலம் பெறுகின்றன. நிலத்தைக்கீறி வெளியேறி மஞ்சள், சிவப்பு வண்ணங்களில் நம்பிக்கை ஒளியாகப் பூத்துக் குலுங்குகின்றன. நாமும் இந்த கார்த்திகை மாதத்தில் காந்தளின் துளிர்ப்பைப்போல, எதிர்காலம் குறித்த நம்பிக்கையின் விதைப்பாக மரங்களை நாட்டுவோம் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் தீர்மானத்துக்கு அமைவாக ஆண்டு தோறும் கார்த்திகை மாதம் மரநடுகை மாதமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில்,

உலகம் என்றும் இல்லாதவாறு எதிர்காலம் குறித்த பெரும் நம்பிக்கையின்மையை எதிர் கொண்டுள்ளது. கொரோனாப் பெருங் கொள்ளை நோயும், வீறு கொண்டெழும் காலநிலை மாற்றமும் கூட்டாகத் தாக்குதலைத் தொடுத்திருப்பதில் நாடுகள் யாவும் நிலைகுலைந்து போயுள்ளன. ஏழை- பணக்கார நாடுகள் என்ற பேதமின்றி எல்லா நாடுகளினதும் பொருளாதாரப் பலம் ஆட்டம் கண்டு வருகின்றது. இவற்றைச் சரிவரக் கையாள இயலாத நிலையில் நாடுகளின் அரசியல் வலுவும் கேள்விக் குறியாகியுள்ளது.

காட்டு விலங்குகளில் உறையும் வைரஸ்கள் விகாரமுற்றுத் தாக்கியதால் கொடுங் கொரோனா தொற்றும், பூமி சூடாகித் தகிப்பதால் காலநிலை



மாற்றமும் ஏற்பட்டிருப்பது அறிவியல் பூர்வமாக நிரூபணமாகியுள்ளது. காட்டு விலங்குகளை அவற்றின் இயல்பான வாழிடங்களில் இருந்து அள்ளூ கொள்ளையாகக் கடத்துவதன் மூலமும், கரிக்காற்றை உறிஞ்சுகின்ற காடுகளைக் கணக்கின்றிக் கபளீகரம் செய்வதன் மூலமும் இப் பேரிடர்களிற்கு மனிதர்களாகிய நாமே காரணமாகியுள்ளோம்.

இந்தப் பேரிடர்கள் “இயற்கையை நாம் அழித்தால் இயற்கையால் நாம் அழிவோம்” என்ற பாடத்தை எமக்கு வலுவாகப் போதித்திருக்கும் நிலையில், இப்போது சூழல் பாதுகாப்பினதும் மர நடுகையினதும் அவசியம் அதிகம் உணரப்பட்டுள்ளது.

நானிலம், ஐந்திணை என்று இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்கள் மர வழிபாட்டைத் தமது தொல் வழிபாட்டு முறையாக கொண்டிருந்தவர்கள். இறந்தவர்களின் நினைவாக மரங்களை நடுகை செய்து அவற்றை உயிருள்ள நினைவுச் சின்னங்களாகப் போற்றிய பண்பாட்டு மரபைக் கொண்டிருந்தவர்கள். போர்க்கால நெருக்கடிகளிலும் இயற்கையை நண்பனாக நேசித்துச் சூழல் காத்தவர்கள். ஆனால், இன்று பேரினத்துவ அரசியலாலும், உலக மயமாக்கலாலும் இயற்கை வளங்களைக் காவு கொடுத்து நிற்கின்றனர்.

கார்த்திகை மாதத்தில் காந்தளின் துளிர்ப்பைப்போல, எதிர்காலம் குறித்த நம்பிக்கையின் விதைப்பாக மரங்களை நாட்டுவோம். ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறுவோம் - என்றுள்ளது. (ஐ)

# கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துமாறு கிளிநொச்சி விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி, நவ. 01

தற்போது அனைத்து பகுதிகளிலும் பெரும் போக பயிர் செய்கை ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதம் கடந்த நிலையில் கண்டாவளை, முரசுமோட்டை, பெரியகுளம், கல்மடு போன்ற பல பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகள் நடமாடுகின்றன என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இவை, பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள பகுதி களில் தினமும் பயிர்களை நாசம் செய்கின்ற என்று கூறும் விவசாயிகள், உரப்பிரச்னை மற்றும் கிருமிநாசினி பிரச்னைகளுடன் தற்போது கட்டாக்காலி கால்நடைகள் பிரச்னையும் சவாலாக உள்ளன எனத் தெரிவித்தனர்.

பயிர்செய்கை கூட்டங்களில் கால்நடை கட்டுப்படுகள் தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்கள் வெறும் பேச்சளவிலேயே உள்ளதாகவும், இது நடைமுறைகளுக்கு வருவதில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய கமக்கார அமைப்புக்கள் ஊடாக கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு விவசாயிகளால் கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

# கந்தசட்டி விரத ஆரம்பம் குறித்து தமிழ் சைவ பேரவை தெளிவூட்டல்!

யாழ்ப்பாணம், ஒக். 01

கந்தசட்டி விரதம் எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 10ஆம் திகதி நிறைவுறும். சூரன்போர் 9ஆம் திகதி மாலை இடம்பெறும் என்று தமிழ் சைவ பேரவை அறிவித்துள்ளது

தமிழ் சைவ பேரவை விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

எம் முன்னோர்கள் தொன்று தொட்டு இறைவனை மனம் மொழி மெய்களால் உருகி உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் கடைப்பிடிக்கும் இறை நினைவில் ஒன்றிக்கும் வழிபாட்டு முறையே விரதமாகும்.

கந்த புராண கலாசாரம் என சிறப்பிக்கப்படும் சிவபூமி இலங்கையில் கந்த சட்டி மிகவும் சிறப்பாக உருக்கமாக பல்லாயிரம் பேர் குடும்பம் குடும்பமாக வீடுகளிலும் ஆலயங்களிலும் உபவாசமாக இந்த விரதத்தை பக்தி சிரத்தையுடன் ஆறு தினங்கள் ஆறுமுகப் பெருமானை நினைந்து அனுட்டிப்பது வழக்கம்.

இம்முறை விரதம் தொன்று தொட்டு வருவது போன்று ஐப்பசி வளர்பிறை பிரதமை முதல் சஷ்டி ஈறாக உள்ள ஆறு நாட்கள் (05/11/2021- 10/11/20 21) அனுட்டிக்கப்படவிருக்கின்றது. சஷ்டி திதியானது 10.11.2021 இல் பிற்பகல் 2.29 இற்கு முடிவடைகின்றது.

கந்தபுராணத்தை அடிப்படையாகக் கொண்டு சஷ்டி திதியிலேயே சூரன் போர் நடைபெற்று சூரசம்காரம் நிகழ்த்தப்பட வேண்டும். இதனையே “சங்கரன் பிள்ளை சட்டியில் மாவறுத்தாரே” என்று தொன்று தொட்டு தமிழர்களிடையே வழங்கி வரும் பழமொழியும் வலியுறுத்துகின்றது.

அத்துடன் சூரன் போரானது ஆகம பூசை விதிகளுக்கு அமைவாக மாலை வேளைகளில் மாலை 4.00 மணி தொடக்கம் 6.00 மணிவரையே ஆற்றப்படுதல் வேண்டும். எனவே, 9.11.2021 செவ்வாய் மாலை சூரன் போர் நடைபெற்று மறுநாள் இரவு கந்தசட்டி விரதத்தை நிறைவுறுத்தலாம் - என்றுள்ளது. (ஐ)

# மோசமான காலநிலையால் எழுவைதீவில் வீடு சேதம்!

ஊர்காவற்றுறை, நவ. 01

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட எழுவைதீவு ஜே/39 பகுதியில் நேற்றுமுன்தினம் பெய்த மழையால் வீடு ஒன்று பகுதியளவில் சேதமடைந்ததாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுதெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவின் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள தாழமுக்கத்தின் காரணமாக மழையுடனான காலநிலை நீடித்து வரும் நிலையிலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. வீட்டின் கூரைப் பகுதி சேதமடைந்ததால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் பாதிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கர்ப்பவதிகளுக்கு பால்மா பைக்கெற்!

வடமராட்சி, நவ. 01

புலோலி பல நோக்கு கூட்டுறவு சங்க எல்லை பரப்பிற்குள் வதியும் கர்ப்பவதி தாய்மார்களுக்கு 400 கிராம் பால்மா பைக்கெற் 380 ரூபாய்க்கு வழங்கப்படுகின்றது.

கர்ப்பவதி தாய்மார்கள் தமது இடத்தை உறுதிப்படுத்தி கிராமக் கோட்டடியில் உள்ள சங்க தலைமையகத்தில் பால்மா பைக்கெற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று சங்கத்தின் தலைவர் வி. ஜி. தங்கவேல் தெரிவித்துள்ளார். (ஐ-02)

# கிளிநொச்சியில் 79 வீத நிலத்தில் இம்முறை சிறுபோக பயிர்செய்கை!

கிளிநொச்சி, நவ. 01

**கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள 78.6 சதவீதமான நிலப் பரப்பில், இந்த ஆண்டு சிறுபோக நெற்செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாக மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் இராஜகோபு தெரிவித்தார்.**

அத்துடன், தொடர்ந்து கால போக நெற்செய்கையும் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஒன்பது வரையான நீர்ப்பாசன குளங்கள், நீர்ப்பாசனத் திணைக்களத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதாவது, கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள இரணைமடு குளம், பிரமந்தனாறு குளம், கல்மடுக்குளம், கனகாம்பிகை குளம், உள்ளிட்ட நான்கு குளங்களும், மேற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள அக்கராயன் குளம், வன்னேரிக்குளம், குடமுருட்டிகுளம், கரியாலை நாகபடுவான் குளம், உள்ளிட்ட ஐந்து குளங்களும் பராமரிக்கப்படுகின்றன.

இதில், கிழக்கு பகுதியில், 26 ஆயிரத்து 297 ஏக்கர் நிலப்பரப்பிலும் மேற்கு பகுதியில், 7,367 ஏக்கர் நிலப் பரப்பிலும் என சுமார் 33 ஆயிரத்து 664 ஏக்கர் வரையான நிலப்பரப்பு நீர்ப்பாசன பரப்பளவைக் கொண்டுள்ளன. இது வடக்கு மாகாணத்தில் 50 சதவீதமான நிலப் பரப்புகளை கிளிநொச்சி மாவட்டம் கொண்டுள்ளது.

இந்த நிலையில், இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்ட சிறுபோகச் செய்கையின் போது, மொத்த நிலப்பரப்பில் 78.6 சதவீதமான நிலப்பரப்பில், சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வெற்றி கொள்ளப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டில், 68.2 சதவீதமான நிலப் பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட் டது" என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)



# வெள்ளம் பாதித்த பகுதிகளை அரச அதிபர் நேரில் பார்வை!

யாழ்ப்பாணம், நவ. 01

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் நேற்று நேரில் பார்வையிட்டார்.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக மழையுடனான காலநிலை நீடிக்கிறது. இந்த நிலையிலேயே பலபகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் கல்லுண்டாய், நாவாந்துறை, அச்சுவேலி போன்ற சென்ற அரசாங்க அதிபர், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டார்.

அத்துடன், அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் அப்பகுதி மக்களுடனும் மற்றும் அதிகாரிகளுடனும் பேசி ஆராய்ந்தார்.

(ஐ-3)

# ஞானசார தேரருக்கு துணைபோகாதீர் டக்ளஸ், செந்திலிடம் வேண்டுகோள்!

## சுமந்திரன் எம். பி. விடுத்தார்

யாழ்ப்பாணம், நவ. 01

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் 'ஒரேநாடு ஒரே சட்டம்' என்ற எண்ணக்கருவை செயல்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொடை அத்தே ஞானசார தேரர் தலைமையிலான ஜனாதிபதி செயலணிக்குள் தமிழர்களை உள்வாங்கும் செயல்பாடுகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவனாந்தாவும், செந்தில் தொண்டமானும் துணைபோகக்கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழர்களின் அடிப்படைகளையும், நாட்டின் பல்லின தன்மையையும் அடியோடு அழிக்கும் செயல்பாட்டை மேற்கொள்ளவுள்ள ஞானசாரர் தலைமையிலான ஜனாதிபதி செயலணியில் தமிழ் உறுப்பினர்கள் உள்ளிட்ட அதன் செயல்பாடுகளுக்கு பங்களிப்புச் செய்வதன் மூலம் அமைச்சர் டக்ளஸின் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற கோட்பாடு காணமலாக்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரே நாடு, ஒரே சட்டம் எண்ணக்கருவை முன்னெடுப்பதற்காக செயலணியில் தமிழர்கள் இணைத்துக் கொள்ளப்படாமையால் கடுமையான விமர்சனங்கள் எழுந்திருந்தன. இதனையடுத்து ஆளும் தரப்பின் கூட்டத்தில் மூன்று தமிழர்களை இணைக்க ஜனாதிபதி இணங்கினார் என்று அமைச்சர் டக்ளஸ், மற்றும் செந்தில் தொண்டமான் ஆகியோர் தெரிவித்தனர்.

அத்துடன், உறுப்பினர்களை உள்ளீர்க்கும் செயல்பாடுகளுக்கு துணையாகவும் அவர்கள் செயல்பட ஆரம்பித்துள்ளனர். இந்த நாட்டின் பல்லினத் தன்மையை அடியோடு அழித்து சிங்கள, பௌத்த தேசமாக மாற்றவே ஜனாதிபதி செயலணியை பற்றுள்ள, சுயகௌரவமுள்ள எந்தவொரு தமிழனும் பங்கேற்கப் போவதில்லை. இந்நிலையில், அமைச்சர் டக்ளஸ், செந்தில் ஏற்று அதில் தமிழ் உறுப்பினர்களை உள்ளீர்க்க துணையான செயல்பாடுகளை முன்னெடுக்கின்றனர். இதன் மூலம் ஏற்படும் பாரதூரமான விளைவுகளை அவர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார்.

(ஐ)

# தரம் 5 மாணவனுக்கு கொரோனா தொற்று




வவுனியா, நவ. 01

வவுனியா மகா கச்சக்கொடி பகுதியில் அமைந்துள்ள பிரபல பாடசாலையில் தரம் 5இல் கல்வி பயிலும் மாணவன் ஒருவனுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டது. இதையடுத்து, ஏனைய மாணவர்களுக்கு இன்று திங்கட்கிழமை பி. சி. ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளது.

நாட்டில் முன்னெடுக்கப்பட்டிருந்த தொடர் முடக்க நிலை நீக்கப்பட்டு ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான பாடசாலை கல்விச் செயல்பாடுகள் அண்மையில் ஆரம்பமாகின.

இந்த நிலையில் வவுனியா மகாகச்சக்கொடி பகுதியில் அமைந்துள்ள பிரபல பாடசாலை ஒன்றில் தரம் ஐந்தில் கல்வி பயிலும் மாணவன் ஒருவனுக்கே கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ஐ)

# ஆளுநர் அலுவலகம் முன்பாக நாளை கண்டன போராட்டம்!

## ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம், நவ. 01

விவசாயிகள், கால்நடை வளர்ப்பாளர் எதிர்நோக்கும் இடர்களை தீர்க்குமாறு வலியுறுத்தியும் அரசாங்கத்தின் தடைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் நாளை செவ்வாய்க்கிழமை வடக்கு ஆளுநர் அலுவலகம் முன்பாக கண்டப் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட இணைப்பாளர் பிரபாரகரன் தெரிவித்தார்.

மேலும், யாழ். மாவட்டத்தில் விவசாயிகள் கால்நடை வளர்ப்போர் பெரும் இடர்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். அரசாங்கத்தால் உர இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதோடு கால்நடைகளுக்கான தீவனம் பெறுவதிலும் இடர்பாடுகள் காணப்படுகின்றன. இதனால், விவசாயிகள் கால்நடை வளர்ப்போர், பண்ணையாளர்கள் பெரும் இடர்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

விவசாயிகள் கால்நடை வளர்ப்போர் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு நீதி கோரி நாளை செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்னால் கண்டன போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் - என்றார்.

(ஐ)





லயன்ஸ் மாவட்டம் 306பி1இன் – வட மாகாணத்தின் சகல லயன்ஸ் கழகங்களும் இணைந்து கடந்த 24ஆம் திகதி வென்னப்புவ பிரதேசத்திற்கு நட்புறவு பயணம் சென்றன. இதன்போது வடமேல் மாகாண பிராந்தியத்தில் கொரிய நாட்டின் லயன்ஸ்களின் பங்களிப்பில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்பட்ட வீட்டுத்திட்ட கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு ஒரு தொகை உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

## 24 மணிநேரத்தில் 41 பேர் சிக்கினர்!

கொழும்பு, நவ. 01

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 41 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 81 ஆயிரத்து 521 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

# குடும்பஸ்தரை கடத்திச் சென்று கப்பம் பெற்ற மூவர் சிக்கினார்கள்

கொழும்பு, நவ. 01

பொலிஸ் அதிகாரிகள் எனத் தெரிவித்து கொழும்பு, கிராண்ட்பாஸ் மோலவத்த பிரதேசத்தில், குடும்பஸ்தர் ஒருவரைக் கடத்திச் சென்று சுமார் 10 இலட்சம் ரூபாயை கப்பமாகப் பெற்றுக்கொண்ட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள், கடத்தப்பட்டவரது வீட்டின் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி கப்பம் கோரியுள்ளதுடன் இவ்விடயத்தைப் பொலிஸாருக்குத் தெரிவிக்க வேண்டாம் என்றும் அச்சுறுத்தியுள்ளனர்.

அதற்கமைய கடத்தப்பட்டவரின் மனைவியால் தனியார் வங்கியொன்றில் 10 இலட்சம் ரூபாய் வைப்பிலிடப்பட்டுள்ளது.

அதன் பின்னர் கடத்தப்பட்டவர் மாபொல பிரதேசத்தில் கொண்டுவந்து விடப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்டவரின் குடும்பத்தாருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதால் அவர்கள் இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யவில்லை. எனினும், இவ்விடயம் குறித்து பொலிஸ் நிலையத்தில் பின்னர் முறைப்பாடு செய்துள்ளனர்.

வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட பற்றுச்சீட்டு, தொலைபேசி இலக்கம் என்பவற்றை வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைதுசெய்துள்ளனர். (இ)

## நேற்றுமுன்தினம் 100,000 தடுப்பூசி ஏற்றப்பட்டது

கொழும்பு, நவ. 01

நாட்டில் நேற்றுமுன்தினம், 116,151 பேருக்கு கோவிட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்ட என்று தொற்று நோய் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, 61,713 பேருக்கு பைசர் முதல் டோஸும், 1,889 பேருக்கு 2ஆவது டோஸும் , 7,330 பேருக்கு சினோபார்ம் முதல் டோஸும், 38,640 பேருக்கு 2ஆவது டோஸ், 3,125 பேருக்கு அஸ்ட்ராசெனெகா 2ஆவது டோஸும் 3,390 பேருக்கு மொடர்னா 2ஆவது டோஸும் ஸ்புட்னிக்-வி இரண்டாம் தடுப்பூசி 57 பேருக்கும் செலுத்தப்பட்டன.

## கைதிகளுக்கு கைபேசி வழங்கிய மருத்துவருக்கு விளக்கமறியல்!

கொழும்பு, நவ. 01

கைதிகளுக்கு கைபேசி, சார்ஜர் மற்றும் இரண்டு மின்கலங்களை வழங்க முற்பட்டபோது கைது செய்யப்பட்ட மருத்துவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று முன்தினம் சிறைச்சாலை அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டார்.

பின்னர் அவர் பல்லேகல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், நேற்று முன்தினம் தெல்தெனிய நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போதே, அவரை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

# ஸ்ரீல. சுதந்திர கட்சி ஒருபோதும் இனவாதத்துடன் நடக்கவில்லை!

## இப்படி சொல்கிறார் நிமல் சிறீபால டிசில்வா



நுவரெலியா, நவ. 01

**‘எங்களுடைய கட்சி என்றுமே இனவாதத்துடன் நடந்து கொண்டதில்லை. நாங்கள் அனைவரையும் அரவணைத்து செல்ல வேண்டும் என்ற நோக்கத்துடனேயே செயல்பட்டு வருகின்றோம் என தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**

நுவரெலியாவில், இடம்பற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்களுடனான கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் “பௌத்த கொடியை மாத்திரம் ஏந்திக் கொண்டு செல்வதன் மூலம் மாத்திரம் வெற்றியை நோக்கி பயணிக்க முடியாது.

எங்கள் கட்சி பல தசாப்தங்களாக இந்த நாட்டை ஆட்சி செய்த ஒரு கட்சியாகும். அன்று எங்களுடைய கட்சியின் தலைவி முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பெருந்தோட்ட மக்களுக்கான வாக்களிக்கும் உரிமையை பெற்றுக் கொடுத்தார். தொழில் அமைச்சர் என்ற வகையில் நான் அவர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பளத்தை பெற்றுக் கொடுத்தேன்.

எனவே, எங்களுடைய கட்சி தொழிலாளர்களுக்கு தேவையான விடயங்களை அந்தந்த காலத்தில் செய்து கொடுத்து இருக்கின்றது.

நல்லாட்சி அரசாங்கத்தில் எங்களுடைய கட்சியை சார்ந்தவர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வில்லை அதற்கான நிதிகள் ஒதுக்கப்படவில்லை இதன்காரணமாக எங்களுடைய ஆதரவாளர்கள் அந்த அரசாங்கத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள்.

இவ்வாறான ஒரு அரசியல் சூழ்நிலையிலேயே கடந்த தேர்தலில் எங்களுடைய கட்சி தனித்து போட்டியிடுவது என முடிவெடுத்து 14 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. இதன்போது அனைத்து கட்சிகள் இடையையும் விருப்புவாக்கு ஒரு பிரச்னையாக அமைந்திருக்கின்றது அதனாலேயே இதனை நாங்கள் மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றோம்” என்றார். (ஐ)

# சுற்றிவளைப்புக்களில் 3 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, நவ. 01

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட போதைப் பொருள் சுற்றிவளைப்புகளில் இரு இளைஞர்கள் உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கொழும்பு, பேலியகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவலோக்க சுற்றுவட்டப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஒரு கிலோகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கொழும்பை சேர்ந்த 48 வயது நபர் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து 7 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் பணத்தையும் பொலிஸார் கைப்பற்றினர்

அநுராதபுரம் நகரில் 20 கிராம் 55 மில்லிகிராம் ஹெரோயினுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர். 29 வயது நபரே இவ்வாறு கைதானார்.

கம்பஹா ராகமைபொலிஸ் பிரிவு, மஹர பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 67 லீற்றர் 500 மில்லிலீற்றர் மதுபானத்துடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹர பிரதேசத்தை சேர்ந்த 20 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (இ)

## சில வாரங்களில் பாடசாலைகள் வழமைக்கு!

கொழும்பு, நவ. 01

கொரோனா அச்சுறுத்தல்கள் காரணமாக மூடப்பட்ட பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை எதிர்வரும் சில வாரங்களில் வழமைபோல மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இதுவரை இரண்டு கட்டங்களின் கீழ், நாட்டின் அனைத்து முன்பள்ளி பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் மாணவர்களின் வருகையில் முறையான அதிகரிப்பை காண முடிந்துள்ளது.

ஆசிரியர்களின் மற்றும் அதிபர்களின் வருகையும் சிறந்த மட்டத்தில் காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

# ஜனாதிபதி நாடு திரும்பியதும் த. தே. கூட்டமைப்புடன் பேச்சு!

## இராஜதந்திரகளிடம் கூறினார் பீரிஸ்

கொழும்பு, நவ. 01

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தயாராகி வருகிறார் என்று இராஜதந்திர வட்டாரங்களிடம் வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கிளாஸ்கோ நகரில் நடக்கும் காலநிலை மாநட்டில் பங்கேற்க சென்றுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியதும் இந்தப் பேச்சு நடவடிக்கைகள் இடம்பெறும் என்றும் வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார்.

இந்தப் பேச்சு தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகரிடமும் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பேச்சு குறித்து அண்மையில் சந்தித்த உயர்ஸ்தானிகர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரிடம் வினவியபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அவ்வாறு ஓர் அழைப்பு இதுவரை கிடைக்கவில்லை என்று கூறியுள்ளார்.

முன்னதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதி சந்திப்பு ஜூன் 16இற்கு திகதியிடப்பட்டிருந்தது. ஆனால், சந்திப்பு நடைபெறவில்லை. இதைத் தொடர்ந்து பஸில் ராஜபக்ஷ அமைச்சு பொறுப்பேற்ற பின்னர் பேச்சு நடக்கும் என்று உறுதியளித்தபோதும் பேச்சுக்கள் எவையும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# அதிவேக நெடுஞ்சாலையில் 5 வாகனங்கள் மோதி விபத்து!

கொழும்பு, நவ. 01

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கெலனிகம 12.3ஆம் கட்டைக்கு அருகில் விசேட அதிரடிப் படையின் 1969 நோயாளர் காவு வண்டி ஒன்று உட்பட 5 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்கு உள்ளாகி உள்ளது.

சம்பவத்தில் 5 பேர் காயங்களுக்கு உள்ளாகினர் என்று தெரிய வருகின்றது. காயமடைந்தவர்களுள் விசேட அதிரடிப்படையின் காஸ்ட்பிள் ஒருவரும் உள்ளடங்குவார் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் ஹோமாகமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

ஈழநாடு



# குற்றவாளிகளை தேடுபவர்கள் யார்?



**பனங்காட்டான்**

தமிழர் தேசத்தையும் தமிழ்த் தேசியத்தையும் முன்னிறுத்தி இடம்பெறும் பல செயல்பாடுகள் இக்காலத்தில் ஒப்பேற்றப்பட்டு வருகின்றன. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களே சில விடயங்களில் முக்கிய வகிபாகத்தை மேற்கொள்கின்றனர்.

சில வாரங்களுக்கு முன்னர் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, புலம்பெயர் தமிழர்களுடனும் அவர்களின் அமைப்புகளுடனும் தாம் பேச விரும்புவதாக பகிரங்க அழைப்பை விடுத்து நம்பிக்கைதராத அதிர்வை ஏற்படுத்தினார்.

புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளை பெயர் குறிப்பிட்டு தடை செய்தவர், எவ்வாறு அவர்களை பேச்சுக்கு அழைக்க முடியுமென எழுந்த சந்தேகத்தை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெளிவுபடுத்தினார். தடைசெய்யப்பட்ட தமிழர் அமைப்புகளுடன் ஜனாதிபதி பேசமாட்டாரென்றும், அதற்கும் அப்பாலுள்ளவர்களுடனேயே அவர் பேசுவார் என்றும் தெரிவித்ததோடு அந்த விவகாரம் முற்றுப்பெறவில்லை.

இங்கிலாந்திலுள்ள குளோபல் தமிழ் ஃபோரம் என்னும் உலகத்தமிழர் பேரவையின் பேச்சாளர் இது தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்த செவ்வியில், சில விடயங்கள் பொது வெளிக்கு வந்துள்ளது. முதலில் கோட்டாபயவும் பீரிசும் தங்களுக்குள் கலந்துரையாடி இவ்விடயத்தில் தெளிவுபெற வேண்டுமெனக் கூறியுள்ளதோடு, இலங்கை மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுடன் அவர்கள் முதலில் பேச வேண்டுமென நல்ல ஆலோசனையை வழங்கியுள்ளார்.

தமிழர் பிரச்னைத் தீர்வு விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பு இன்னும் அதிகமாக வேண்டுமென்ற கருத்தோடு, தமிழருக்கு உதவவும் உரையாடவும் சீனா ஆர்வமாக இருந்தால் அது மகிழ்ச்சியளிப்பதாக இருப்பதாகவும் தமது கருத்தை இப்பேச்சாளர் முன்வைத்துள்ளார்.

இலங்கை அரசு சீனாவை கட்டிலில் அணைத்தவாறு, இந்தியாவின் தோளில் கைபோட்டு கூடிவாழ முனைவதற்கு ஒப்பானதாக, உலகத்தமிழர் பேரவை கனவு காண்பதை இக்கூற்றினூடாக அவதானிக்க முடிகிறது. கடந்த காலங்களில் இவ்வாறாக இரட்டை நிலைப்பாட்டை உலகத் தமிழர் பேரவை எடுத்ததால் அது பல சங்கடங்களை எதிர்கொள்ள நேர்ந்தது நினைவிருக்கலாம்.

இங்கிலாந்தை மையப்படுத்தி வெளிவந்துள்ள முக்கியமான ஒரு தகவல் - அங்குள்ள 200 தமிழர்களின் முன்னெடுப்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் தாக்கலாகியுள்ள மனு.

கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கமால் குணரட்ன, இராணுவத் தளபதியாகவிருந்த ஜகத் ஜெயசூரிய உட்பட பல படைத்துறை அதிகாரிகளின் மனிதகுல விரோதச் செயல்களுக்காக அவர்களை உரிய நேரத்தில் கைது செய்ய வேண்டுமென இந்த மனு கோருகின்றது.

நேரடியாக சாட்சியம் வழங்கத் தயாராகவுள்ள 200 இங்கிலாந்துவாழ் தமிழர் சார்பில் குளோபல் றைற்ஸ் கொம்ப்ளையன்ஸ் (அனைத்துலக உரிமைகள் விதிமுறை) என்னும் சட்டவாளர் அமைப்பு இந்த மனுவை சமர்ப்பித்துள்ளது. மியன்மார் (பர்மா) ரொஹிங்கியா முஸ்லிம்கள் விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்றது இதே சட்டவாளர் அமைப்பு.

இலங்கை அரசின்மீது சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனு மீதான குற்றப்பத்திரிகை இனிமேல் தாக்கல் செய்யப்பட வேண்டும். அதன் பின்னர், இதன் மீதான விசாரணையை நடத்த குற்றவியல் நீதிமன்றம் ஒப்புதல் வழங்க வேண்டும். இவற்றுக்கு ஏறத்தாழ இரண்டு வருடங்கள் வரை செல்லலாம்.

இங்கிலாந்தில் நடைபெறும் கால நிலை மாற்ற மாநாட்டுக்குச் சென்றுள்ள கோட்டாபயவை கைது செய்ய வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது. எந்தச் சட்டத்திலும் அதற்கான நியாயாதிக்கம் இல்லையென்றே கூறப்படுகிறது. எனினும் அவரது விஜயத்துக்குப் பலமான எதிர்ப்பைக் காட்ட தமிழர் சமூகம் முனைப்புடன் செயல்படுகிறது. இங்கிலாந்துப் பத்திரிகைகளில் இது தொடர்பான முழுப்பக்க விளம்பரங்களும் அறிக்கைகளும் பெருமளவு செலவில் இடம்பெறுகின்றன.

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் போர்வையில் இடம்பெறும் கொடூரமான செயல்பாடுகள் பற்றி இந்த வாரம் அமெரிக்க பேரவையின் மனித உரிமை ஆணைக்குழு விவாதித்தது நோக்குதற்குரியது. பதினெட்டு மாதங்கள் வரை ஒருவரை காவலில் வைக்க அனுமதிக்கும் இச்சட்டத்தால் தமிழர்கள் மட்டுமன்றி அனைவரும் பாதிக்கப்படுவதையும், ஈஸ்டர் குண்டுத்தாக்குதலை சாதகமாக்கி முஸ்லிம்களை கைது செய்வதையும் ஆணைக்குழு கவனத்தில் எடுத்தது.

முக்கியமாக, பயங்கரவாதத்தை முறியடிப்பது என்ற போக்கில் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழர்கள் கைதாவது, ஊடக சுதந்திரம் மற்றும் சிவில் அமைப்புகள் விசாரணைக்குட்படுத்தப்படுவது, அச்சுறுத்தப்படுவது, தடுத்து வைப்பது என்பவற்றை இந்த அமர்வில் பங்குபற்றிய ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் அம்பிகா சற்குணநாதன் விபரித்தார்.

புனர்வாழ்வு பெற்ற நாற்பது வரையான முன்னாள் போராளிகள் வடபுலத்தில் இரவோடிரவாக கைதாகி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் போதிய ஆதாரங்களுடன் அண்மையில் தமது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இச்சட்டத்தை நீக்கினால் மட்டுமே ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை தொடர்ந்து வழங்கப்படுமென ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்தபோது, கோதபாய தமது வழக்கமான பாணியில் இதற்கென ஒரு ஆலோசனைக் குழுவை உடனடியாக நியமித்தார். இச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு பிரித்தானியாவிலுள்ள பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு இணைவாக மாற்றுவதற்கு ஆலோசனைக்குழு பரிந்துரைத்தது. இதன் அர்த்தம் பயங்கரவாதத் தடைச்சட்டம் சிறு திருத்தங்களுடன் தொடர்ந்து இருக்கும் - நீக்கப்படமாட்டாது என்பதே.

ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றிய 46:1 தீர்மானமும் இச்சட்டம் நீக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியது. கடந்த செப்டம்பர் மாத வாய்மூல அறிக்கையில் மனித உரிமைகள் ஆணையாளர் பச்சிலற் அம்மையார் இதனை அழுத்திக் கூறியிருந்தார்.

இவைகளுக்கு எதிர்மாறாக இப்போதும் பலர் கைது செய்யப்பட்டு இதே சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படுகின்றனர். ஜெனிவாவும் ஐரோப்பிய ஒன்றியமும் தங்களை எதுவுமே செய்ய முடியாதென்ற இறுமாப்புடன் ராணுவ ஆட்சி தொடர்ந்து காரியங்களை மேற்கொள்கிறது.

இவ்வேளையில் திடுதிப்பென எறிகுண்டொன்றை வீசுவது போன்று ஜனாதிபதி செயலணியொன்றை கோட்டாபய நியமித்துள்ளார். இதற்குப் பெயர் "ஒரே நாடு ஒரே சட்டம்" நடைமுறைக்கான செயலணி. மொத்தம் 13 உறுப்பினர்களை (இதிலும் 13 தான்) அவர் நியமித்துள்ளார். ஒன்பது பேர் சிங்களவர், நால்வர் முஸ்லிம்கள். தமிழர் தரப்பிலிருந்து எவருமில்லை. பெண்களுக்கு இடமேயில்லை. இது தற்செயலானதல்ல - திட்டமிட்ட செயல்பாடு.

இதிலுள்ள சிறப்பம்சம் இந்தச் செயலணியின் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பவர் யார் என்பதே. அறவழிக்குப் புறம்பான மதவெறி கொண்ட கலகொடை அத்தே ஞானசார தேரரே அவர். பல நீதிமன்ற படிகள் ஏறி தண்டனை பெற்ற ஒரு குற்றவாளி. இறுதியாக நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைதண்டனை பெற்றவர்.

2019ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி கோட்டாபயவின் நிறைவேற்று அதிகாரத்தால் சிறைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் மன்னிப்பு வழங்கப்பட்டு தப்பி வந்த பௌத்த பிக்கு இவர். இவர் சட்டவாளர் அல்ல. சட்டத்தை தூசாக மதித்து செயல்படுபவர். பொதுபலசேன என்ற சிங்கள பௌத்த தேசிய இயக்கத்தின் செயலாளர் நாயகம். கொலைகாரர் ஆட்சியில் அனைவருக்கும் பொறுப்பான சட்ட நிர்வாக நெறிமுறையை நடைமுறைப்படுத்த, அதனை மதிக்காத ஒரு குற்றவாளியை இப்பதவிக்கு கோட்டாபய தெரிந்தெடுத்துள்ளார்.

ஒரே நாடு ஒரே சட்டம் எனக்கூறப்படும் நாட்டில், ஞானசார தேரருக்கு சிறைத்தண்டனையிலிருந்து மன்னிப்பு வழங்க முடியுமென்றால், குற்றம் சுமத்தப்படாதிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய ஏன் முடியாது? இதற்கு ஞானசார தேரர் சம்மதம் கொடுக்க வேண்டுமா? இதுதான், ஒரே நாடு ஒரே சட்டமா?

இதனை எழுதிக் கொண்டிருக்கும் போது கிடைத்த ஒரு தகவல், இச்செயலணிக்கு மூன்று தமிழர்கள் நியமிக்கப்படப் போவதாகக் கூறுகிறது. அரசின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தொழிலாளர் காங்கிரஸின் வேண்டுகோளுக்கிணங்க ஜனாதிபதி கோட்டாபய இந்த முடிவுக்கு வந்துள்ளாராம். வடக்கு, கிழக்கு, மலையகம் என்றவாறு பிரதேச ரீதியாக ஒவ்வொரு தமிழர் இதில் இடம் பெறுவர் எனவும் சொல்லப்படுகிறது.

'ஏக்கராஜ்ய' கேட்டு வரும் தமிழர் தரப்பு ஒரே நாடு ஒரே சட்டம் என்பதை எதிர்க்க முடியாது. அதனாற்தான் ஞானசார தேரரை தலைவராக நியமித்ததை மட்டும் எதிர்க்கிறது. சிலவேளை தங்கள் தரப்பில் ஒருவரை செயலணியில் நியமித்தால் அதனை ஏற்றுக் கொள்ளவும் கூடும்.

கோட்டாபயவுக்கு முன்னராக இங்கிலாந்து சென்றுள்ள அமைச்சர் பீரிஸ் அந்நாட்டின் பொதுமக்கள் அவையின் சபாநாயகர் சேர். லின்ட்சே ஹொயில் அவர்களை சந்தித்து உரையாடியபோது இலங்கையில் மீண்டும் செனற் சபை கொண்டு வரப்போவதாக கூறியுள்ளார். 1972ஆம் ஆண்டில் சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கத்தினால் கலைக்கப்பட்ட செனற் சபையை மீள நிறுவப் போவதாக கூறியிருப்பது புதிய அரசியலமைப்புடன் சம்பந்தப்பட்டது.

இங்கிலாந்தில் இருப்பது போன்ற இரு சபைகளை இலங்கையில் கொண்டு வரப்போவதாகக் கூறுவது இப்போதைக்கு இங்கிலாந்தை வளைத்துப்போட உதவலாம். ஜெனிவாவில் இங்கிலாந்து தனது கூட்டு நாடுகளுடன் இலங்கை மீது தீர்மானங்கள் நிறைவேற்றுவதை மென்மைப்படுத்தவும் உதவலாம்.

இலங்கையில் போர்க்குற்றம் நிகழ்வதற்கு காரணமாகவிருந்த நாடுகள் இப்போது இலங்கையின் மனித உரிமை மீறல்களையும் தமிழரின் அரசியல் அபிலாசைகளையும் நிறைவேற்ற வேண்டுமென குரல் கொடுக்கின்றன. இலங்கைக்கு தாராள பயணங்களை மேற்கொள்கின்றன. தமிழர் தரப்பினரைச் சந்தித்து வாக்குறுதிகளும் வழங்குகின்றன.

அமெரிக்க வெளியுறவு முன்னாள் செயலாளர் டீன் அச்சேசென் ஒரு தடவை உலக நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கை பற்றி உதிர்த்த பொருள் பொதிந்த வாசகம் தமிழருக்குமானது. "நாடுகள் நல்லுறவை நாடுபவை அன்று, அவை தம்நலன் மட்டுமே நாடுபவை" (Nations do not have morals, they only have their interests).

முக்காலமும் பொருந்தும் அமெரிக்க அரசியல்வாதியின் இக்கூற்று, எக்காலமும் தமிழர் மனதில் கல்வெட்டாக இருக்க வேண்டியது. ■



> **கிறீன்லாந்து மற்றும் அந்தாட்டிக் பனிக்கட்டிகள் வேகமாக உருகுகின்றன. வானிலை தொடர்பான பேரழிவுகளின் எண்ணிக்கை 50 ஆண்டுகளில் ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது. உலகளாவிய கடல் மட்டம் கடந்த நூற்றாண்டில் 20 செ.மீ உயர்ந்திருக்கிறது. இன்னும் உயர்ந்து வருகிறது.**

## பருவநிலை மாற்றம்:

# பேரழிவுக்கு காரணம் மனிதர்கள் என்பதற்கு ஆதாரம் என்ன?

*பருவநிலை மாற்றம் காரணமாக நமது ஒட்டுமொத்த பூமியும் நெருக்கடியை எதிர்கொண்டிருக்கிறது என்று விஞ்ஞானிகளும் அரசியல்வாதிகளும் கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், பூமி வெப்பமடைகிறது என்பதற்கு என்ன ஆதாரம்? அது மனிதர்களால்தான் ஏற்படுகிறது என்பது நமக்கு எப்படித் தெரியும்?*

*தொழில்துறை புரட்சி தொடங்கியதிலிருந்தே நமது பூமி வேகமாக வெப்பமடைந்து வருகிறது. 1850ஆம் ஆண்டிலிருந்து பூமியின் மேற்பரப்பின் சராசரி வெப்பநிலை சுமார் 1.1 பாகை செல்சியஸ் உயர்ந்துள்ளது. கடந்த நான்கு தசாப்தங்களை எடுத்துக் கொண்டால் அதில் ஒவ்வொரு தசாப்தமும் அதற்கு முந்தையதைவிட அதிக வெப்பமாக இருந்திருக்கிறது.*

*இந்த முடிவுகள் உலகின் பல்வேறு பகுதிகளில் சேகரிக்கப்பட்ட இலட்சக்கணக்கான அளவுகளைப் ஆய்வு செய்து தருவிக்கப்பட்டவை. வெப்பநிலை அளவீடுகள் தரை, கப்பல்களில் உள்ள வானிலை நிலையங்கள் மற்றும் செயற்கைக் கோள்கள் மூலமாகச் சேகரிக்கப்படுகின்றன.*

*விஞ்ஞானிகளைக் கொண்ட பல சுயாதீனக் குழுக்கள் அனைத்தும் தொழில் புரட்சிக்குப் பிறகு உலகம் வெப்பமடைந்திருக்கிறது என்ற முடிவுக்கே வந்திருக்கின்றன. வெப்பநிலையில் உள்ள ஏற்ற இறக்கங்களை இன்னும் முந்தைய காலத்தில் இருந்தே விஞ்ஞானிகளால் மீளுருவாக்கம் செய்து காட்ட முடியும்.*

*மர வளையங்கள், பனிக்கட்டிகள், ஏரி வண்டல்கள் மற்றும் பவளப்பாறைகள் போன்ற அனைத்தும் முந்தைய காலநிலையின் தடங்களைக் கொண்டிருக்கின்றன. இவையனைத்தும் தற்போதைய வெப்பமயமாதலுக்கான காரணத்தை வழங்குகின்றன. உண்மையில் கடந்த 1,25,000 ஆண்டுகளில் பூமி இவ்வளவு வெப்பமாக இருந்ததில்லை என்று விஞ்ஞானிகள் மதிப்பிடுகின்றனர்.*

*பூமி வெப்பமடைவதற்கு மனிதர்களே காரணம் என்பது நமக்கு எப்படித் தெரியும்?*

*சூரியனின் வெப்பத்தை பூமியின் மேற்பரப்பில் அடைத்து வைக்கும் பசுமை இல்ல வாயுக்களே பூமியின் வெப்ப நிலை உயர்வுக்கும் மனித நடவடிக்கைகளுக்குமான தொடர்பு. வளிமண்டலத்தில் மிகவும் அதிகமாக இருப்பதால், காபநீர் ஒட்சைட் இவற்றுள் முக்கியமானதாகிறது.*

*பசுமை இல்ல வாயுக்கள் என்பதற்குப் பதிலாக, காபநீர் ஒட்சைட் சூரிய வெப்பத்தை பூமியில் தக்க வைக்கிறது என்றும் நாம் சொல்லலாம். காபநீர் ஒட்சைட் உறிஞ்சும் அளவு போக எஞ்சிய வெப்பமே பூமியில் இருந்து வெளியேறுகிறது என்று செயற்கைக்கோள்கள் காட்டுகின்றன.*

*புதைபடிம எரிபொருட்களை எரிப்பது மற்றும் மரங்களை வெட்டுவது போன்ற நடவடிக்கைகள் பசுமை இல்ல வாயுக்களை வெளியேற்றுகின்றன. 19ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு இவ்விரு செயல்பாடுகளும் மிக வேகமாக அதிகரித்தன. எனவே, ஒரே நேரத்தில் வளிமண்டலத்தில் காபநீர் ஒட்சைட் அதிகரித்ததில் ஆச்சரியமில்லை.*

*இந்த கூடுதல் காபநீர் ஒட்சைட் எங்கிருந்து வந்தது என்பதை நாம் உறுதியாகக் காட்ட ஒரு வழி இருக்கிறது. புதைபடிம எரிபொருட்களை எரிப்பதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் கார்பன் ஒரு தனித்துவமான இரசாயன அடையாளத்தைக் கொண்டுள்ளது.*

*மர வளையங்கள் மற்றும் துருவ பனி ஆகிய இரண்டும் வளிமண்டல வேதியியலில் ஏற்படும் மாற்றங்களை பதிவு செய்கின்றன. இவற்றை ஆய்வு செய்யும் போது, புதைபடிம மூலங்களிலிருந்து வெளியான கார்பன் 1850 முதல் கணிசமாக உயர்ந்துள்ளது என்பது தெரிய வந்திருக்கிறது.*

*8 இலட்சம் ஆண்டுகளாக, வளிமண்டல காபநீர் ஒட்சைட் ஒரு மில்லியனுக்கு 300 துகள்கள் (பிபிஎம்) என்ற அளவுக்கு மேல் உயரவில்லை என்று ஆய்வுகள் காட்டுகின்றன. ஆனால் தொழில் புரட்சிக்குப் பின்னர், கார்பன் டை ஆக்ஸைடின் செறிவு 420 பிபிஎம் என்ற தற்போதைய அளவுக்கு உயர்ந்திருக்கிறது.*

*கணினி உருவகப்படுத்தும் தொழில்நுட்பம் மூலமாக பருவநிலை மாதிரிகள் உருவாக்கப்பட்டுகின்றன. இவை மனிதர்களால் வெளியிடப்படும் பசுமை இல்ல வாயுக்கள் இல்லாவிட்டால் பூமியின் வெப்பநிலை எப்படி இருந்திருக்கும் என்பதைக் காட்டுகின்றன.*

*20 மற்றும் 21ஆம் நூற்றாண்டுகளில், இயற்கையான காரணிகள் மட்டுமே காலநிலையை பாதித்திருந்தால், சற்று புவி வெப்பமடைதலும் குளிர்வித்தலும் நடந்திருக்கும் என்பதை இந்த மாதிரிகள் கூறுகின்றன.*

*மனிதர்களால் ஏற்படும் விளைகளைச் சேர்க்கும்போது மட்டுமே இந்த மாதிரிகள் வெப்ப நிலை அதிகரிப்பதாகக் காட்டுகின்றன.*

*பூமியில் மனிதர்கள் என்ன தாக்கத்தை ஏற்படுத்துகிறார்கள்?*

*ஏற்கெனவே பூமியில் ஏற்பட்டிருக்கும் வெப்பத்தின் உயர்வு கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றங்கள் தொடர்பாக, நிஜ உலகில் நடப்பதற்கும் விஞ்ஞானிகளின் கணிப்பிற்கும் பொருந்திப் போகின்றன.*

**கீழ்க்கண்டவை அவற்றில் அடங்கும்:**

*கிரீன்லாந்து மற்றும் அண்டார்டிக் பனிக்கட்டிகள் வேகமாக உருகுகின்றன. வானிலை தொடர்பான பேரழிவுகளின் எண்ணிக்கை 50 ஆண்டுகளில் ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது. உலகளாவிய கடல் மட்டம் கடந்த நூற்றாண்டில் 20 செ.மீ உயர்ந்திருக்கிறது. இன்னும் உயர்ந்து வருகிறது.*

*1800களில் இருந்து, பெருங்கடல்கள் சுமார் 40% அதிக அமிலத் தன்மைக்கு மாறியிருக்கிறது. அது கடல்வாழ் உயிரினங்களை பாதிக்கிறது.*

*கடந்த காலத்தில் பூமி வெப்பமாக இல்லையா?*

*பூமியில் முன்னரும் பல வெப்பமான காலங்கள் இருந்தன.*

*உதாரணமாக, 9.2 கோடி ஆண்டுகளுக்கு முன்பு, வெப்பநிலை மிகவும் அதிகமாக இருந்ததால், துருவங்கள் பனியால் மூடப்படவில்லை. முதலையைப் போன்ற உயிரினங்கள் கனடாவின் ஆர்ட்டிக் பிராந்தியம் வரை வாழ்ந்தன.*

*ஆனால், இதை வைத்து நாம் ஆறுதல் அடைய முடியாது. ஏனெனில் அப்போது மனிதர்கள் இல்லை. அந்தக் காலகட்டத்தில் கடல் மட்டம் இப்போது இருப்பதை விட 80 அடி அதிகமாக இருந்தது. இதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமானால், 5 முதல் 8 அடி வரை கடல் நீர்மட்டம் உயர்ந்தாலே இப்போதைய உலகின் முக்கிய கடலோர நகரங்கள் அனைத்தும் மூழ்கிவிடும்.*

*இந்தக் காலகட்டங்களில் உயிரினங்கள் பெருமளவில் அழிந்துவிட்டன என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. வெப்ப மண்டலங்கள் உயிரினங்கள் வாழ முடியாத அளவுக்கு “இறந்த மண்டலங்களாக” மாறியிருக்கலாம் என பருவநிலை மாதிரிகள் காட்டுகின்றன.*

*வெப்பத்திற்கும் குளிருக்கும் இடையிலான இந்த ஏற்ற இறக்கங்கள், சூரியனை நீண்ட நேரம் சுற்றி வரும்போது பூமி அதிர்வது, எரிமலை வெடிப்புகள் மற்றும் எல் நினோ போன்ற குறுகிய கால காலநிலை சுழற்சிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளால் ஏற்படுகிறது.*

*பருவநிலை மாற்றம் என்பதற்கான அறிவியல் ஆதாரங்களைச் சந்தேகிக்கும் குழுக்கள் பல ஆண்டுகளாக இருந்து வருகின்றன.*

*இருப்பினும், மதிப்பாய்வு செய்யப்பட்ட பத்திரிகைகளில் வழக்கமாக வெளியிடும் அனைத்து விஞ்ஞானிகளும் பருவநிலை மாற்றத்திற்கான தற்போதைய காரணங்களை ஒப்புக்கொள்கிறார்கள்.*

*வளிமண்டலம், பெருங்கடல்கள், நிலம் ஆகியவை வெப்பமடைந்ததற்கு மனிதனின் நடவடிக்கைகளே காரணம் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை என்று 20121-இல் வெளியிடப்பட்ட ஐ.நா. அறிக்கை ஒன்று கூறுகிறது.*

**- நன்றி: பி.பி.சி.**



# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் : 1 மணித்தியாலம் 15 நிமிடம்

கல்வி tv CHANNEL

**23.**




i) பென்சில் A இன் நீளத்தினை எழுதுக.

……………………cm

ii) A,B பென்சில்களின் நீளங்களுக்கு இடையிலான வித்தியாசத்தினை மில்லிமீற்றரில் எழுதுக.

……………………mm

**24.** சங்கவி ஓரிடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து வடக்கு நோக்கி 50m சென்று தனது இடது பக்கமாகத் திரும்பி 100m சென்று கோயிலை அடைந்தாள். பின்னர் அதிலிருந்து இடது பக்கமாகத் திரும்பி 75m சென்று மீண்டும் இடதுபக்கமாகத் திரும்பி 100m சென்று குறித்த இடத்தை அடைந்தாள்.

i) சங்கவி பயணத்தை ஆரம்பித்த இடத்திற்கும் தற்போது உள்ள இடத்திற்கும் இடையிலான தூரம் யாது?

……………………………………………………………………

ii) பயணத்தை ஆரம்பித்த இடத்திலிருந்து கோயில் எத்திசையில் உள்ளது?……………………

**25.** 4லீற்றர் 800 மில்லிலீற்றர் நீர் நிரப்பக்கூடிய தொட்டி ஒன்றில் $\frac{1}{3}$ ற்கு நீர் ஊற்றப்பட்டுள்ளது. அத்தொட்டியை முழுமையாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீர் தேவை?

………………l……………ml

**26.** பின்வரும் சிட்டையைப் பூர்த்தி செய்க.

| பொருள் | 1 kg இன் விலை | | அளவு | விலை | |
|---|---|---|---|---|---|
| | ரூபாய் | சதம் | | ரூபாய் | சதம் |
| அரிசி | 110 | 00 | 1500g | ……. | ……. |
| பருப்பு | …… | ……. | 300g | 18 | 00 |
| சீனி | 145 | 00 | 500g | ……… | …….. |
| | மொத்தம் | | | ……… | …….. |

**27.**


| தோட்டம் | பலா | மா | வாழை |
|---|---|---|---|
| எண்ணிக்கை | 1235 | 999 | 2022 |

தோட்டம் ஒன்றில் உள்ள பயிர் வகைகளின் விபரம் அருகே தரப்பட்டுள்ளது.

1) தோட்டத்திலுள்ள பயிர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ………………………………


2) தோட்டத்திலுள்ள பலா , மா ஆகியவற்றின் கூட்டுத்தொகையானது வாழையின் எண்ணிக்கையை விட எத்தனை அதிகம்?

……………………………………………………………………

**28.**  இச்சதுரத் தளவடிவத்தில் எத்தனை சமச்சீர்க் கோடுகளை வரையலாம்?

……………………………………………………

**29.** மாணவர்கள் குழுவொன்று அதிகமாக விரும்பும் காலை உணவு தொடர்பான தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளன.




i) மிகக் கூடுதலான உணவை விரும்பும் மாணவர்களுக்கும் தோசையை விரும்பும் மாணவர்களுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?…………………………

ii) இட்லியை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை 11 ஆகும். இதனை வரைபில் வரைந்து காட்டுக.

- **30 தொடக்கம் 59 வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30.** "எனது உள அமைதியை எனது வீட்டாருக்கும் என்னால் பகிர்ந்தளிக்கமுடியும்" இது மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டின்
1) 3ஆம் படிமுறை 2) 5ஆம் படிமுறை 3) 1ஆம் படிமுறை

**31.** உணவாகப் பயன்படும் இலைகளைக் கொண்ட தொகுதி.
1) பசளி, மா, பாகல் 2) அகத்தி, பூசணி, வல்லாரை
3) வல்லாரை, பொன்னாங்காணி, முருங்கை

**32.** பின்வருவனவற்றுள் ஊனுண்ணி எது?
1) கோழி 2) தும்பி 3) பூனை

**33.** பின்வருவனவற்றில் இலங்கைக்கே உரித்தான முலையூட்டி எது?
1) கலவத்தன் 2) புலத்ஹுப்யா 3) சபன்கோழி

**34.** உலக மரபுரிமையாக கணிப்பும் பெற்றுள்ள இடம்
1) சிங்கராசவனம் 2) கசூர்னா கடற்கரை 3) காலிக்கோட்டை

**35.** தேசிய இலச்சினை பொறிக்கப்பட்டுள்ள ஆவணங்களை மாத்திரம் கொண்டமைந்த விடை
1) கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை, மாவட்டச் செயலகம்
2) பொலீஸ் நிலையம், மாவட்டச் செயலகம், பிறப்புச் சான்றிதழ்
3) பிறப்புச் சான்றிதழ், கடவுச் சீட்டு, அடையாள அட்டை

**36.** கண்டி தலதாமாளிகையில் தியவடனே நிலமே ஆகப் பதவி வகித்தவர்
1) கொங்காலேகொட பண்டா 2) கெப்பெட்டிப் பொல திசாவ
3) வண.எஸ்.மகிந்த

**37.** அனல்மின் உற்பத்திக்குப் பயன்படும் மூலப்பொருள்
1) சூரியஒளி 2) டீசல் 3) நிலக்கரி

### உலக நாடுகளை அச்சுறுத்தி வரும்

# புதிய 'ஏ 30' கொரோனா வைரஸ் திரிபு இலங்கையிலும் பரவலடையும் ஆபத்து

கொழும்பு, நவ. 01

அநேகமான உலக நாடுகளை தற்போது அச்சுறுத்தி வரும் 'ஏ 30' என்றழைக்கப்படும் கொரோனா வைரஸ் தொற்றின் புதிய திரிபு தொடர்பில் இலங்கையிலும் பரவும் அச்சுறுத்தல் நிலை இருக்கின்றது என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

ஊடங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

திருமண நிகழ்வுகள் மற்றும் மரண சடங்குகளின்போது சுகாதார விதிமுறைகள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் செயல்படுவதன் காரணமாக இந்த வைரஸ் அதிகளவில் பரவலடைவதற்கான வாய்ப்பு அதிகம் இருக்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த புதிய வைரஸ் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கை



யில்,

"உலக நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்றின் புதியவொரு திரிபு அடையாளம் காணப்பட்டுள்ளது. பைசர், அஸ்ட்ரா செனக்கா உள்ளிட்ட பிரதான வகைகளைச் சேர்ந்த சகல வகை தடுப்பூசிகளினூடாகவும் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பை உடைத்தெறிவதற்கான தன்மை புதிய திரிபான 'ஏ 30' திரிபிடம் இருக்கின்றது.

இந்தப் புதிய திரிபு பரவலடைந்தால் பாரிய நெருக்கடியைச் சந்திக்க நேரிடும் என்று முழு உலகமும் எச்சரிக்கை நிலையுடன் செயற்பட்டு வருகின்றது.

ஆகவே, இது தொடர்பில் நாமும் அவதானம் செலுத்த வேண்டும். கொரோனா முற்றாக நிறைவுக்கு வந்துவிட்டது என்று எண்ணி மக்கள் செயல்பட்டால் மேலும் நான்கே வாரங்களில் இந்தத் திரிபின் பிரதிகூலத்தை அனுபவிக்க நேரிடும்" - என்றார். (இ)

# அநுராதபுரம் மாவட்டத்தில் கொரோனா கொத்தணி!

## ஆசிரியர்கள், மாணவர்களும் பாதிப்பு


அநுராதபுரம், நவ.01

**அநுராதபுரம் மாவட்டத்தில் கடந்த வாரம் கொரோனா வைரஸ் நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.**

அநுராதபுரம் மாவட்ட தொற்று நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் ஆர். எம். ரத்நாயக்க இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: -

"அநுராதபுரம் மாவட்டத்தில் கடந்த வாரம் அதிகளவான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



கடந்த திங்கட்கிழமை வெள்ளிக்கிழமை வரையான 5 நாட்களில் மாத்திரம் 650 நோயாளர்களுக்கும் அதிகளவானவர்கள் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில் ஆரம் பப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சிலருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது" - என்றார். (இ)

# இரண்டு பொலிஸாரை தாக்கிய 18 பேர் கைது!

## 10 பேர் பெண்கள்

கொழும்பு, நவ. 01



கொழும்பு - மொறட்டுவை - மாதங் கஹவத்தை பகுதியில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் 18 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களுள் 10 பெண்களும், 08 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த பகுதியில் இரண்டு தரப்பினருக்கு இடையேயான மோதல் சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் அங்கு சென்றிருந்தனர்.

இதன்போது பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அவர்களில் தலையில் பலத்த காயத்துக்குள்ளான பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் களுபோவில போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (இ)

# கட்டணம் செலுத்தாதவர்களுக்கு மின் விநியோகம் இடைநிறுத்தம்

## அமைச்சர் காமினி லொக்குகே எச்சரிக்கை



கொழும்பு, நவ. 01

"பல மாதங்களாக மின்சாரக் கட்டணம் செலுத்தாத வாடிக்கையாளர்களுக்குச் சிவப்பு பட்டியல் அனுப்பப்பட்ட போதிலும், தொடர்ந்தும் கட்டணத்தைச் செலுத்தாதவர்களின் மின்சார விநியோகத்தை இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது."

- இவ்வாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"கொரோனாத் தொற்று நோயால் ஏற்படும் வருவாய் இழப்பைக் கருத்தில்கொண்டு மின்சாரக் கட்டணம் செலுத்துவதற்கு சில நிவாரணங்களை வழங்க அரசு முடிவு செய்துள்ளது. ஆனால், மாதாந்தக் கட்டணத்தைச் செலுத்தக்கூடியவர்கள் கூட அதைத் தொடர்ந்து செலுத்தவில்லை.

கடந்த சில மாதங்களாக அவ்வப்போது மின்கட்டணம் செலுத்திய வாடிக்கையாளர்களின் மின் இணைப்பு துண்டிக்கப்படாது.

தொடர்ந்து மின்கட்டணம் செலுத்தாதவர்கள், செலுத்தத் தயக்கம் காட்டினால் தற்காலிகமாக மின் இணைப்பைத் துண்டிக்க வேண்டும்.

எப்படியிருப்பினும் மின்சாரத்தை துண்டிப்பதற்கு முன்னர் சிவப்புப் பட்டியல் வழங்கப்படும்" - என்றார். (இ)

# பயிர் செய்கையிலிருந்து விலக விவசாய அமைப்பினர் தீர்மானம்

## காய்கறிகளின் விலையும் சடுதியாக அதிகரிப்பு

கொழும்பு, நவ. 01



உரத் தட்டுப்பாடு காரணமாக நாடு முழுவதும் காய்கறிகள் உள்ளிட்ட ஏனைய பயிர்ச் செய்கையிலிருந்து விலகுவதற்கு விவசாயிகள் தீர்மானித்துள்ளனர் என்று விவசாயிகள் அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது பொருளாதார மத்திய நிலையங்களுக்குக் கிடைத்துவரும் காய்கறிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதன் காரணமாக, தற்போது காய்கறிகளின் விலை நூற்றுக்கு நூறு வீதம் அதிகரித்துள்ளது என அறியமுடிகின்றது.

முன்னதாக தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு 25 இலட்சம் கிலோ வரையில் காய்கறிகள் கிடைத்து வந்த நிலையில், தற்போது அது 3 இலட்சமாக வீழ்ச்சியடைந்துள்ளது. அதேபோல் எதிர்வரும் 2 மாதங்களில் மழையுடனான வானிலை நிலவுமானால் காய்கறிகளின் விலை மேலும் அதிகரிக்கும் எனவும் விவசாயிகள் அமைப்பின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மொத்த விற்பனை சந்தையில் 200 ரூபாயாக இருந்த போஞ்சி ஒரு கிலோ தற்போது 450 ரூபாயாக அதிகரித்துள்ளது. மேலும் 280 ரூபாயாக இருந்த மாலுமிரிஸ் 540 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

மேலும், பச்சை மிளகாய் கிலோ 120 ரூபாவாகவும், கரட் 120 ரூபாயாகவும் காணப்பட்ட நிலையில் இவைகளின் விலையும் 100 வீதத்தால் அதிகரித்துள்ளது எனவும் விவசாயிகள் அமைப்பின் பிரதிநிதிகள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (இ)



# பாப்பரசர் பிரான்சிஸுக்கு இந்திய பிரதமர் அழைப்பு!

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸை இந்தியாவுக்கு வருமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

நரேந்திரமோடி வத்திக்கானில் பாப்பரசருடனான தனது முதல் சந்திப்பின் படங்களை ருவிட்டரில் பகிர்ந்திருந்தார். அத்துடன், இந்த அழைப்பு தொடர்பிலும் தகவல் வெளியிட்டார்.

ரோமில் நடைபெற்று வரும் உலக பொருளாதார நாடுகளின் ஜி20 மாநாட்டில் இந்திய பிரதமர் கலந்துகொண்டார். 1999 ஆம்ஆண்டு இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் இந்தியா சென்றிருந்தார்.

இந்தியாவில் கிறிஸ்தவர்கள் உட்பட மத சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாடுகள் மற்றும் வன்முறை அதிகரிப்பு பற்றிய கவலைகளுக்கு மத்தியில் இந்த அழைப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. மோடியின் பாரதிய ஜனதா கட்சி இந்துத்வா சார்பு அடையாளத்தையும் நிகழ்ச்சி நிரலையும் உள்ளடக்கியது என்று வலுவான குற்றச்சாட்டு உள்ள நிலையில் இதனை மோடி மறுத்துள்ளார்.

மோடி தனது ருவிட்டரில் மிகவும் அன்பான சந்திப்பை பாப்பரசருடன் மேற்கொண்டார் எனவும், அவருடன் பல தரப்பட்ட பிரச்னைகள் குறித்து பேசப்பட்டதாக பதிவிட்டுள்ளார். 2017இல் பாப்பரசர் இந்தியா வருமாறு அழைக்க இந்திய ஆயர்கள் குழு மறுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜி-20 மாநட்டில் வரலாற்று தீர்மானம்
# பெருநிறுவனங்களின் வரியை உயர்த்த தலைவர்கள் ஒப்புதல்!



ரோம், நவ. 01


ஜி-20 பொருளாதார நாடுகளின் தலைவர்கள் பெருநிறுவனங்களின் வணிக இலாபத்திற்கு 15வீத வரி விதிக்க ஒப்புதல் அளித்துள்ளனர்.

குறைந்த வரி அதிகார வரம்புகள் மூலம் பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் இலாபத்தை மறுபரிசீலனை செய்கின்றன என்ற கவலையை இது பின்பற்றுகிறது. ரோமில் நடந்த மாநாட்டில் பங்கேற்ற அனைத்து தலைவர்களும் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டனர்.

காலநிலை மாற்றம் மற்றும் கோவிட்-19 ஆகியவை இந்த உச்சிமாநாட்டின் தொற்றுநோய் ஆரம்பித்தபின்னர் தலைவர்கள் நேரடியாகக் கூடுவது இது முதல் தடவையாகும். எனினும், இந்த மாநாட்டில் சீன தலைவர் ஜி ஜின்பிங், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆகியோர் காணொலி மூலம் இணைந்திருந்தனர்.

அமெரிக்காவின் பெருநிறுவனங்கள் வரி செலுத்த வேண்டியேற்பட்டாலும், அமெரிக்க வணிகங்களும் தொழிலாளர்களும் அதிக நன்மையடைவர் என்று அமெரிக்க கருவூல செயலாளர் ஜெனட் யெல்லன் கூறினார்.

மேலும், 10ஆயிரம் கோடி டொலர்களை காலநிலையால் பாதிக்கப்படும் வளரும் நாடுகளுக்கு வழங்குவதற்கு ஜி - 20 நாடுகளின் முடிவு 2023 ஆம் ஆண்டுக்குக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# மாயன்களின் 1000 ஆண்டுகள் பழைய படகு கண்டுபிடிப்பு!

மெக்சிக்கோ சிற்றி, நவ. 01

ஆயிரம் ஆண்டுகள் பழமையானதாக நம்பப்படும் மரத்தாலான மாயன் படகு ஒன்றை தென் மெக்சிக்கோவில் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

5 அடிக்கு மேல் அளவுள்ள இந்தப் படகு சிச்சென் இட்சாவின் பாழடைந்த மாயன் நகருக்கு அருகே உள்ள நன்னீர் குளத்தில் மூழ்கி கிட்டத்தட்ட அப்படியே காணப்பட்டது.

மெக்சிகோவின் பழங்கால நிறுவனம், இது தண்ணீரை பிரித்தெடுக்க அல்லது சடங்குகளை செய்யப் பயன்பட்டிருக்கலாம் என்று கூறுகின்றது.

"மாயா ரயில்" எனப்படும் சுற்றுலா ரயில் பாதையின் கட்டுமானப் பணியின்போது இந்த அரிய கண்டுபிடிப்பு கிடைத்தது. மட்பாண்டங்கள், சடங்கு கத்தி, சினோட் என்று அழைக்கப்படும் ஒரு பாறை முகத்தில் கைகளால் வரைந்த ஓவியங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஸ்பெயின் இந்தப் பகுதியை கைப்பற்ற முன்னர் மாயன் நாகரிகம் செழித்திருந்தது. மாயன்கள் இன்றைய தென் மெக்சிக்கோ, கௌதமாலா, பெலிஸ், ஹொண்டூரஸ் எனப் பெரும் பகுதிகளை ஆட்சி செய்தனர். கி. பி. 830 -950 காலப்பகுதி மாயன்களின் பொற்காலமாகும். இப்போதைய கண்டுபிடிப்பான படகும் இந்தக் காலப் பகுதிக்கு உரியதாகவே கூறப்படுகின்றது. (ஐ)

# வளரும் நாடுகளுக்கு 2 கோடி தடுப்பூசிகள்!
## பிரிட்டன் பிரதமர் அறிவிப்பு

லண்டன், நவ. 01

பிரிட்டன் இந்த வருடம் இறுதிக்குள் 2 கோடி கொரோனா தடுப்பூசி டோஸ்களை வளரும் நாடுகளுக்கு அனுப்ப இருப்பதாக அந்நாட்டுப் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் கருத்தரங்கில் பிரிட்டன் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் பேசும் போது, "சுமார் 2 கோடி கொரோனா தடுப்பூசி டோஸ்களை இந்த வருடம் இறுதிக்குள் பிற நாடுகளுக்கு வழங்க இருக்கிறோம். பிரிட்டன் முன்னரே 10 கோடி கொரோனா தடுப்பூசி டோஸ்களை ஏழை நாடுகளுக்கு வழங்கியுள்ளது.

கொரோனாவினால் இழந்த பொருளாதாரம் மீண்டு வருகிறது. கொரோனாவினால் உண்டான பொருளாதார இழப்பை சரி செய்யும் நடவடிக்கைகளில் உலக நாடுகளின் தலைவர்கள் தயாராக வேண்டும்.

உலகின் முழுமையான பொருளாதார வளர்ச்சிக்கு கொரோனா முழுமையாக ஒழித்தாலே தீர்வு" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# கட்டுப்படுத்த முடியாத வைரஸ் தோன்ற வாய்ப்பு!



நம்மால் கட்டுப்படுத்த முடியாத மற்றொரு வைரஸ் வெளிப்படும் என்பது உறுதி என்று உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ரோஸ் கெப்ரியேசஸ் தெரிவித்துள்ளார்.

ஜி20 நாடுகளின் சுகாதாரம் மற்றும் நிதி அமைச்சர்களின் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அப்போது அவர் கூறுகையில், 'ஒரு கட்டத்தில், நம்மால் கட்டுப்படுத்த முடியாத மற்றொரு வைரஸ் வெளிப்படும் என்பது உயிரியல் உறுதி. எனவே அடுத்த தொற்றுநோய்க்கு தயாராகும் வகையில் தற்போதைய தொற்றிலிருந்து சர்வதேச சமூகம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்' என தெரிவித்தார்.

இதற்காக, வலுப்படுத்தப்பட்ட, அதிகாரமளிக்கப்பட்ட மற்றும் நிலையான நிதியளிக்கப்பட்ட உலக சுகாதார அமைப்பு தேவை எனக்கூறிய கேப்ரியேசஸ், இது தொற்றுநோய்களுக்கு விரைவான எதிர் தாக்குதலையும், சிறந்த நிர்வாகத்தையும் உறுதி செய்வதற்கான ஒரு புதிய வழிமுறை எனவும் தெரிவித்தார். (ஐ)

# காலநிலை மாற்ற உச்சிமாநாடு கிளாஸ்கோவில் ஆரம்பமானது!

கிளாஸ்கோ, நவ. 01

உலகம் முழுவதும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய சி. ஓ. பி. 26 காலநிலை மாற்ற உச்சி மாநாடு நேற்று ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் ஆரம்பமானது.

200 நாடுகளை சேர்ந்த தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் 2030ஆம் ஆண்டுக்குள் காபன் உமிழ்வை எவ்வாறு குறைப்பது மற்றும் பூமியை காக்க எவ்வாறு உதவுவது என்பது தொடர்பில் இந்த மாநட்டின் முடிவில் அறிவிக்கவுள்ளனர்.

மனிதர்களால் ஏற்படும் புதைபடிவ எரிபொருள் உமிழ்வுகளால் உலகம் வெப்பமடைந்து வருகிறது. காலநிலையால் ஏற்படும் பேரழிவை தடுக்க அவசர நடவடிக்கை தேவை என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். காலநிலை மாற்றத்தால் தீவிர வானிலை நிகழ்வுகள் நீடிக்கின்றன. அதீத வெப்ப அலைகள், வெள்ளம், வறட்சி, காட்டு தீ என்பன கடந்த தசாப்தங்களில் இல்லாதவாறு உருவாகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த அராசங்கங்களின் கூட்டு நடவடிக்கை அவசியம் என்பதை சகல நாடுகளும் உணர்ந்துள்ளன.

நேற்று கூடிய ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டமானது இங்கிலாந்தில் இதுவரை நடத்தப்பட்ட மிகப்பெரிய உச்சிமாநாடுகளில் ஒன்றாகும். தொற்றுநோய் அச்சுறுத்தலால் இந்தக் கூட்டம் ஒரு வருடம் காலதாமதமானது. சி. ஓ. பி. என்பது கட்சிகளின் மாநாடு என்பதையும் 26ஆவது மாநாடு என்பதையும் குறிக்கிறது.

ஜி-20 உச்சிமாநாடு காரணமாக பல நாடுகளின் தலைவர்கள் நேற்று தாமதமாகவே இந்த மாநாட்டில் பங்கேற்றனர். நேற்று சம்பிரதாயபூர்வமாக மாநாடு ஆரம்பமானது. ஒவ்வொரு நாடுகளின் பிரதிநிதிகளும் 2015இல் புவி வெப்பமடைதலை தொழில்துறைக்கு முந்தைய நிலைகளை விட 2 பாகை செல்சியஸூக்கு கீழே மாற்ற ஒப்புக் கொண்ட னர். வானிலை நிகழ்வுகள் தீவிரமடைவதால் சுற்றுச்சூழல் அபாயத்தை குறைக்க 1.5 பகையாக குறைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# 'மொட்டு'வை தொடர்ந்து விமர்சித்தால் கன்னத்தில் அறையவும் நாங்கள் தயார்

## பங்காளிகளுக்கு திஸ்ஸ குட்டியாராச்சி எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, நவ. 01

**"சிறீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர்களை இலக்குவைத்து பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் தொடர்ந்தும் சொற்போர் தொடுத்தால், பங்காளிகளின் கன்னத்தில் அறைவதற்குக்கூட நாம் தயார்."**

- இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் சிறிலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி.

இது தொடர்பில் ஊடகங்க ளிடம் அவர் மேலும் கூறிய தாவது: -

"அரசுக்குள் இருந்துகொண்டு சுகபோகங்களை அனுபவித்து விமர்சனங்களை முன்வைப் பதைவிட, வெளியில் சென்று முதுகெலும்புடன் விமர்சனங் களை முன்வைப்பதே மேல்.

எங்கள் கட்சித் தலைவர் களை விமர்சனங்களால் தொடர்ந்தும் தாக்கினால், பின் வரிசை எம்.பிக்களாகிய நாம் பங்காளிகளின் கன்னத்தில் அறையக்கூட தயாராகவே இருக் கின்றோம்" - என்றார். (இ)



### துப்பாக்கி ரவைகளுடன் சந்தேக நபர்கள் கைது

தெல்தெனிய பகுதியில் கைத் துப்பாக்கிக்குரிய 100 ரவைகள் உள்ளிட்ட சில பொருட்களு டன் சந்தேக நபர்கள் இருவர் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

தெல்தெனிய - ரஜவெல்ல பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் முன்னெ டுத்த சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்கள் வசமிருந்த ரம்போ ரக கத்தி, தொலை நோக்கி, எயார் ரைபிள், நான்கு வோக்கிடோக்கிகள், இலக்க த்தகடற்ற இரண்டு மோட்டார் சைக்கிள்கள், இலக்கத்தகடுடன் கூடிய நான்கு மோட்டார் சைக்கிள்கள், வெளிநாட்டுக் கடவுச்சீட்டு மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் ஆகியனவும் கைப்பற்றப்பட டுள்ளன. இவ்வாறு கைதுசெய் யப் பட்ட 43 மற்றும் 44 வயது டைய இருவரும் விசாரணை களின் பின்னர் தெல்தெனிய நீதிவான் நீதிமன்றத்தில் முன்னி லைப்படுத்தப்படவுள்ளனர். (இ)

# ஆட்சியை தக்கவைப்பதற்கு மீண்டும் இனவாதத்தை கையிலெடுத்த அரசு!

## நளின் பண்டார எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 01

"இனவாதம் மற்றும் மத வாதத்தைக் கக்கி, மக்களைப் பிளவுபடுத்தி ஆட்சியைப் பிடித்த இந்த அரசு, தற்போது ஆட்சியைத் தக்கவைத்துக்கொள் வதற்கும் அதே பாணியைக் கையாள்கின்றது. இதற்காகவே ஞானசார தேரர் தலைமையில் ஜனாதிபதி செயலணி அமைக் கப்பட்டுள்ளது."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர் நளின் பண்டார குற்றஞ் சாட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது: -

"இனவாதம் பேசி, மதவா தத்தைக் கையில் எடுத்து, மக்க ளைப் பிளவுபடுத்தி, மோதல் களை ஏற்படுத்தியே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. தற்போது எல்லா வழிகளிலும் தோல்வி கண்டுள்ளது. எனவே, ஆட்சி யைத் தக்கவைத்துக்கொள் வதற்காக அன்று கையாண்ட யுக்திகளை கையாள முயற்சிக் கின்றார்.

ஞானசார தேரர் உள்ளிட் டவர்கள் இந்த அரசைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தனர். ஞானசார தேரர் யார் என்பது அனைவருக்கும் தெரியும். ஊடகவியலாளர் எக்னெலிகொடவின் மனை வியை அச்சுறுத்தினார். நீதிமன்றத்தை அவமதித்தார். இனங்களை இலக்கு வைத்து பிரசாரம் முன்னெடுத்தார். இப்படியான ஒருவர் தலை மையில் ஒரே நாடு, ஒரே சட் டம் எனும் ஜனாதிபதி செய லணி ஏன் அமைக்கப்பட வேண்டும்? இதன் நோக்கம் தெளிவாகின்றது.

இனவாதம், மதவாதம் உள்ளிட்ட விடயங்களைக் கைவிடுமாறு கேட்டுக்கொள் கின்றோம். அதேபோல் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்ப வத்துக்கு நீதி கோரிய அருட் தந்தையர்கள் தற்போது சி.ஐ. டிக்கு அழைக்கப்படுகின்றனர். இது நிறுத்தப்பட வேண்டும்" - என்றார். (இ)



# தொடர்ந்து எகிறும் அரிசியின் விலை!

கொழும்பு, நவ. 01

சந்தையில் அரிசியின் விலை தொடர்ந்தும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதற்கமைய, புறக்கோட்டை சந்தையில் ஒரு கிலோ நாட்ட ரிசி 140 ரூபாய்க்கும், ஒரு கிலோ சம்பா அரிசி 150 ரூபாய்க்கும், ஒரு கிலோ கீரி சம்பா அரிசி 220 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்தப் பின்னணியில் குறித்த பிரச்னைக்குத் தீர்வு காணும் வகையில் இந்தியாவிலிருந்து மாத்திரமின்றி பாகிஸ்தான் மற் றும் மியன்மார் ஆகிய நாடுகளிலி ருந்தும் அரிசி இறக்குமதி செய் யப்படும் என வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் அரிசி யின் விலை அதிகரித்துக் காணப் பட்டது.

இதனையடுத்து, அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை அறிவிக் கப்பட்டதோடு, சந்தையில் ஏற் பட்ட அரிசித் தட்டுப்பாடு காரணமாக அது நீக்கப்பட்டது.

இந்நிலையில், அரிசி ஆலை உரிமையாளர்களால் புதிய விலை கள் அறிவிக்கப்பட்டதோடு ஒரு கிலோ நாட்டரிசி 115 ரூபாய் எனவும், ஒரு கிலோ சம்பா அரிசி 140 ரூபாய் எனவும், ஒரு கிலோ கீரி சம்பா அரிசி 165 ரூபாய் எனவும் அறிவிக்கப்பட்டது.



எவ்வாறாயினும் குறித்த விலையை மீறி அதிக விலை களில் சந்தையில் அரிசி விற்பனை செய்யப்படுகின்றது.

அதிகரித்த அரிசி விலை யைக் கட்டுப்படுத்துவதற்காக அரச இந்தியாவிலிருந்து ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் அரி சியை கட்டம் கட்டமாக இறக் குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வாறு இறக்கு மதி செய் யப்படுகின்ற அரிசி சதொச ஊடாக விற்பனை செய் யப்படுவதோடு, நுகர்வோருக்கு ஒரு சந்தர்ப்பத்தில் 5 கிலோ அரிசி மாத்திரமே கொள்வனவு செய்ய முடியும் எனவும் அறி விக்கப்பட்டுள்ளது. (இ)

# இராஜதந்திர நெறிமுறைகளை மீறி செயல்படுகிறது கோட்டாபய அரசு!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 29

"தற்போதைய அரசாங்கம் இராஜதந்திர நெறிமுறைகளை யும்மீறி செயல்படுகின்றது." - என்று பிரதான எதிர்க்கட்சி யான ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரி யெல்ல கூறியவை வருமாறு:

வழமையாக வெளிநாட்டுத் தூதுவர்களை, அமைச்சர்கள் தமது அமைச்சுக்கு அழைத்தே பேச்சு நடத்துவார்கள். விளக் கம் கோருவார்கள். இதுவே இராஜதந்திர நடைமுறை. ஆனால், இந்த அரசாங்கத்தின் அமைச்சர்களும், அதிகாரி களும் தூதுவர்களை நாடி, தூதரகங்களுக்கே சென்று சந்திப் புகளை நடத்துகின்றனர். இது நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயலாகும்.

சீன நிறுவனத்திடமிருந்து உரம் வாங்கிய விவகாரம் இராஜதந்திர நடவடிக்கை அல்ல. நிலைமை இவ்வாறிருக் கையில், இதனை இராஜதந்திர பிரச்னையாக காண்பிப்பதற்கு அரசு முற்படுகின்றது-என்றார்.

அதேவேளை, சீனா என்பது எமக்கு மிக முக்கிய நாடு. தடுப் பூசி உட்பட பல வழிகளிலும் உதவிகளை செய்துள்ளது. உரத்தை மட்டும் அடிப்படை யாக வைத்து உறவை கணிக்க முடியாது. தூதுவருக்கு விளக்க மளிக்கப்பட்டது. மாறாக தூது வர் எமக்கு அழைப்பு விடுக்க வில்லை என்று இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (அ)



# முதல்வர் வேட்பாளராக களமிறங்க நான் தயார்

## முன்னாள் அமைச்சர் ஹரிசன் அறிவிப்பு

கொழும்பு, நவ. 01

"வடமத்திய மாகாண முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்குவதற்குத் தயாராகவே இருக்கின்றேன்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பி னரும் முன்னாள் அமைச்சருமான பி. ஹரிஷன் தெரிவித்தார். இது தொடர் பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது: -



"யுகதனவி ஒப்பந்த விவகாரத்தால் அரசுக்குள் மோதல் ஆரம்பமாகி யுள்ளது. பங்காளிக் கட்சிகள் போர்க்கொடி தூக்கியுள்ளன. இந்நிலையில், மக்களும் அரசுக்கு எதிரான நிலைப்பாட்டிலேயே உள்ளனர். தேர்தலொன்று நடத்தப்படுமானால் இது தெரியவரும்.

வடமத்திய மாகாண முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்க நானும் தயார். மக்கள் யார் பக்கம் என்பதை நிரூபித்துக் காட்டுவேன்" - என்றார். (இ)


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2021
கொரோனா கற்றுத்தந்த பாடம்
'இயற்கையை நாம் அழித்தால்
இயற்கையால் நாம் அழிவோம்'
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகை மாதத்தில் காந்தளின் துளிர்ப்பைப் போல
நம்பிக்கையின் விதைப்பாக மரங்களை நாட்டுவோம்
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

## 13 குறித்து...

தமிழ்த் தேசியக் கட்சிகளான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழ் மக்கள் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.), தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர். எனினும், இந்தக் கூட்டத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சி பங்கேற்காது என்று அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள இந்தக் கூட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார் பில் அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஆகியோர் பங்கேற்பர் என்று ரெலோவின் பேச்சாளர் கு. சுரேன் உறுதிப்படுத்தினார்.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியப் பரப்பில் செயல்படும் கட்சிகளுடன், சிறுபான்மையின கட்சிகளும் இணைந்துள்ள போதும் சேர்ந்து இயங்கக்கூடிய சகல கட்சிகளுடனும், 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவான தென்னிலங்கை கட்சிகளையும்கூட இணைத்துக் கொண்டும் விரைவில் பயணிப்போம் - என்றும் அவர் மேலும் கூறினார்.

தமிழ் அரசுக் கட்சி பங்கேற்காதது தொடர்பில் ரெலோவின் பேச்சாளர் கு. சுரேனிடம் 'ஈழநாடு' கேள்வி எழுப்பிய போது,

தமிழ் அரசுக் கட்சி அதுபற்றி எமக்கு அறிவித்தது. 6ஆம் திகதி கட்சியின் தலைமைக் குழுவின் கூட்டத்தின் பின்னர் இந்த சந்திப்பை நடத்துமாறு கேட்டிருந்தனர். ஆனால், இது முன்னரே திட்டமிட்ட கூட்டம் - எனவே, திட்டமிட்டபடி கூட்டம் நடக்கும். அடுத்துவரும் சந்தர்ப்பங்களில் தமிழ் அரசுக் கட்சி பங்கேற்கும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

இந்தக் கூட்டம் குறித்து கடந்த 23ஆம் திகதி மெய்நிகர் வழியில் கூடிய தமிழ்த் தேசியக் கட்சிகள் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்குமாறு இந்திய பிரதமரை கடிதம் மூலம் கோருவது என்று முடிவு எடுக்கப்பட்டது. இலங்கை தமிழ் அரசுக் கட்சியும் இதற்கு ஆதரவை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கை...

போதனா மருத்துவமனையின் ஆய்வு கூடத்தில் நேற்று 215 பேரின் மாதிரிகள் பி. சி. ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதிலேயே புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இதன்படி, வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 31 பேர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர்.

தவிர, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 4 பேரும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒருவர், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் ஒருவர், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் ஒருவர் என யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 7 பேரும், முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் இருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். (ஐ)

## ஒத்திவைக்குமாறு...

கேற்காதது தொடர்பில் தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவை 'ஈழநாடு' தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, "இந்தக் கூட்டத்தில் பங்கேற்பது என்று அரசியல் குழு கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டது. இந்த நிலையில், கடந்த 29 ஆம் திகதி தலைவர் சம்பந்தனை உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே சந்தித்து உரையாடினார். இந்த சந்திப்பில் பல விடயங்கள் பேசப்பட்டன. இதைத் தொடர்ந்து அன்றைய நாளிலேயே நடக்கவுள்ள கூட்டத்தை பிற்போடுமாறு நானும் தலைவர் சம்பந்தனும் கேட்டோம்.

"இந்த விடயம் இந்திய உயர்ஸ்தானிகரிடமும் தெரிவிக்கப்பட்டது. அவருடன் பேசப்பட்ட இந்த விடயங்களை நாம் இப்போது பகிரங்கப்படுத்த முடியாது. இந்த விடயத்தை நாம் மிகக் கவனமாகக் கையாள வேண்டும். அடுத்த முறை பாராளுமன்ற கூட்டத் தொடரின் போது நாம் அனைவரும் கூடிப் பேசிய பின்னர் இதுபற்றி முடிவு எடுப்போம். இந்த விடயங்கள் தொடர்பில் தலைவர் சம்பந்தன் அறிவிப்பார", என்றார். (ஐ)

## ஏன் கொல்லப்...

கலந்துகொண்டு உரையாற்றிய போதே இதனை தெரிவித்த அவர், "அதனால், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியிலுள்ள தகவல்களை முழுமையாக வெளிப்படுத்துமாறு இந்த நாட்டின் தலைவர்களை மீண்டும் கேட்டுக்கொள்கிறோம்" எனத் தெரிவித்தார்.

"நாம் முன்னெடுக்கும் இந்தப் போராட்டம் பிரச்னைகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டதல்ல. நீதி நிலைநாட்டப்படுவதற்காகவ இதனை நாம் முன்னெடுக்கிறோம். நீதி நிலைநாட்டப்படவேண்டும் என்பதைத்தான் நாம் எதிர்பார்க்கின்றோம்" எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கடும் மழையால்...

காலநிலை காணப்படுகின்றது. இதன் தாக்கத்தால், ஊற்காவற்துறை, தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் 69 குடும்பங்களை சேர்ந்த 247 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நான்கு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

அனர்த்த பாதிக்கப்புக்கள் தொடர்பான விவரங்கள் அந்தந்த பிரதேச செயலகங்கள் ஊடாகப் பெறப்பட்டு அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மத்திய நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (ஐ-03)

## விபத்தில்...

செல்லையா சற்குணநாதன் (வயது 78) என்பவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளை செலுத்திய இளைஞர் மதுபோதையில் வாகனத்தை செலுத்தியமையே விபத்துக்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

இந்த விபத்தில் 22 வயதான அந்த இளைஞரம் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 6 ஆயிரம்...

ஏற்றிச் செல்லும் பேருந்துகளின் அனுமதிப்பத்திரம் இன்று முதல் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து சேவையில் இலங்கை போக்குவரத்துக்கு சொந்தமான 6 ஆயிரம் பேருந்துகள் சேவையில் ஈடுபடும். இதேபோன்று 152 ரயில் சேவைகளும் இடம்பெறவுள்ளன.

தவிர, நீண்டதூர ரயில் சேவைகள் எதிர்வரும் 5ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

## மேலும் 18 பேர்...

துள்ளனர் என்பதுடன், கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 13,743 ஆக அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் மரணமடைந்த இவர்கள் அனைவரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# உர பிரச்னைக்கு விரைவில் நிரந்தர தீர்வு கிடைக்கும்!

## அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ



கொழும்பு, நவ. 01

உர பிரச்னைக்கு இன்னும் சில நாட்களில் நிரந்தரமான தீர்வு கிடைக்கும். விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தை அரசு ஏற்று இழப்பீடு வழங்குவதாக இருந்தால் போராட்டம் நடத்துவதில் அர்த்தமில்லை. இந்த எதிர்ப்பு அலைக்கு பின்னால் அரசியல் உள்நோக்கம் காணப்படுகிறது என்று நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

புதிய களனி பாலத்தை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசியல் கட்சியினர் பணம் கொடுத்து ஆர்ப்பாட்டக்காரர்களை தூண்டிவிடுகிறார்கள். அப்பாவி மக்களை நெருக்க வேண்டாம் என்றும், கோவிட் தொற்று நோய் மற்றும் இரசாயன உர விவகாரத்தை தேர்தல் இலாபம் பெறுவதற்காக பயன்படுத்த முயல வேண்டாம் என்றும் கட்சியினரைக் கோருகின்றோம் - என்றார்.

தொழிற்சங்கங்கள் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் சரியானது என்று சொல்ல முடியாது. தொழில் சங்கம் என்பது அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாகும். அண்மையில் துறைமுக தொழில்சங்கங்கள் கிழக்கு முனையத்தை வழங்குவதை எதிர்த்தன. இதன் விளைவாக கிழக்கு முனையத்திற்கு பதிலாக அதனை விட பெரிய மேற்கு முனையம் வழங்கப்பட்டது.

தொழில் சங்கங்கள் அரசியல் கோணத்தில் இல்லாமல் நாடு முகங்கொடுத்துள்ள நெருக்கடி நிலை குறித்து சிந்தித்து செயற்பட வேண்டும்.

ஓர் அலகு மின்சாரத்தின் விலை குறைவதாக இருந்தால் தொழிற்சங்கங்கள் ஏன் அதனை எதிர்க்கின்றன? குறைந்த விலையில் மின்சாரம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்தால் அது ஊழல் ஆகாது.

தொழில் சங்கங்கள் அதிக விலைக்கு சார்பாக இருந்தால் அதன் பின்னணியில் அரசியல் நோக்கம் இருக்கிறது. தொழிற் சங்கங்கள் நாட்டு மக்களை இரண்டு நாட்களுக்கு இருட்டில் வைத்திருக்க முயல்கின்றன என்றால் அது எத்தகைய அநீதியான முடிவாகும்? மின்சார விலையை குறைக்கும் அரசின் திட்டம் மக்களுக்கு கிடைத்த வெற்றியாகும் - என்றார். (ஐ)

# அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது 'மலையக அரசியல் அரங்கம்'



கொழும்பு, நவ 01

மலையக சமூக, அரசியல், பொருளாதார விடயங்களை அரசியல் நோக்கோடு அணுகுவதற்கும் செயற்படுவதற்குமான தளமாக "மலையக அரசியல் அரங்கம்" எனும் பொதுத்தளம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளதாக அதன் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நுவரெலிய மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜ் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"மலையகத் தமிழ் மக்களின் சமூக அரசியலை பொதுத் தளத்தில் உரையாடுவதற்கும் பொதுக் களத்தில் செயற்படுத்துவதற்குமான அமைப்பாக மலையக அரசியல் அரங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்படுகின்றது. மலையகத்தின் பல மாவட்டங்களிலும் மலையகத்திற்கு வெளியேயும் செயற்பாட்டில் உள்ள, மலையக மக்களின் அரசியல், சமூக, பொருளாதார நலனில் அக்கறை கொண்ட பொது அமைப்புகளும் தனிப்பட்ட ஆளுமைகளும் இந்த அரங்கத்தில் உறுப்பினர்களாக இணைந்து கொண்டுள்ளனர், இணைந்து கொள்ளவும் உள்ளனர்.

அரசியல் கட்சியாக அல்லாது அதே நேரம் மலையக சமூகத்தில் எழுகின்ற அரசியல் ரீதியாக பேசப்படவேண்டிய, அணுகப்படவேண்டிய விடயங்களை ஆராய்ந்து அதனைப் பொதுத் தளத்தில் அறிவார்ந்த உரையாடலாக முன்னெடுத்து அடுத்த தலைமுறை அரசியல் செயல்பாடுகளுக்கான 'சமூக அரசியல் களத்தை' உருவாக்குவதும் செயற்படுத்துவதும் மலையக அரசியல் அரங்கத்தின் பிரதான இலக்காகும்.

சமூக அரசியல் செயல்பாடாக சக சமூகங்களுடனும் சர்வதேச தளத்திலும் மலையகத் தமிழ் மக்களின் அரசியல் பிரிதிநிதியாக பங்கேற்பதும் இந்த அமைப்பின் குறிக்கோள்களில் ஒன்றாகும்.

'மலையகம்' என்ற அடையாளத்தை வலியுறுத்துவதாகவும், 'அரசியல்' அடிப்படையில் உரையாடுவதை வெளிப்படைத் தன்மையுடன் உறுதி செய்வதாகவும், இந்தத் தளத்தில் அக்கறைகொண்ட யாருவரும் இணையக்கூடிய அழைப்பு விடுப்பதாக "அரங்கம்" எனவும் அமைப்பின் பெயர் தீர்மானிக்கப்பட்டு உள்ளது.

நிகழ்நிலையில் இடம்பெற்ற தொடக்க விழாவில் பல்வேறு மாவட்டங்களையும், அமைப்புகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் பிரிதிநிதிகள் கலந்து கொண்டதுடன் மலையகத் தமிழ் மக்களின் இலங்கை வருகையின் 'இரு நூற்றாண்டு கால' பூர்த்தியை முன்னிட்டு உரையாடல் தலைப்புகளும் செயற்பாட்டு உபாயங்களும் விவாதிக்கப்பட்டு முதற்கட்டமாக அனைவரதும் பங்களிப்புடன் இருபது விடயதானங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதனை முன்னெடுப்பதற்கான விடயதான தலைவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அடுத்து வரும் மாதங்களில் இந்த ஒவ்வொரு விடயதானங்களையும் பொது வெளியில் உரையாடவும் உரிய இடங்களை நோக்கி அதனை நகர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பூஸ்டர் டோஸ்...

தடுப்பூசியின் இராண்டாவது டோஸ் பெற்று 6 மாதங்களின் பின்னரே செலுத்தப்படும். இதில், முன்னுரிமையாளர்களாக சுகாதார தரப்பினர், முப்படையினர், மற்றும் விமான நிலையம், துறைமுகம் மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடையவர்களுக்கு செலுத்தப்படும் - என்றார்.

ஈழநாடு
Eelanadu




# இந்தியாவின் நம்பிக்கை சிதைந்தது! நியூசிலாந்து அணி அபார வெற்றி!!

டுபாய், நவ. 01

நியூசிலாந்து அணியுடனான போட்டியில் மோசமான தோல்வியை இந்தியா சந்தித்தது. இந்தத் தோல்வியின் மூலம் இந்தியாவின் அரையிறுதி வாய்ப்பு நம்பிக்கை நூலிழையில் தொங்குகிறது.

உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர் 12 போட்டியில் நேற்றிரவு நடந்த போட்டியில் இந்தியா - நியூசிலாந்து அணிகள் மோதின. டுபாயில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சில மாற்றங்களுடன் களமிறங்கியது. கே. எல். ராகுல், இஷான் கிஷன் இணை தொடக்கம் கொடுத்தது. கிஷன் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அடுத்து வந்தார் ரோஹித் சர்மா. இந்த நிலையில், ராகுல் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, ரோஹித் சர்மா 14 ஓட்டங்களுடன் வெளியேறினார். பின்னர் வந்த விராட் கோலி 9 ஓட்டங்களையே பெற்றார்.



10 ஓவர்கள் நிறைவில் 48 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்து தடுமாறியது இந்திய அணி.

ஹார்திக் பாண்ட்யாவும், ரவீந்திர ஜடேஜாவும் சற்றுப் பொறுமையாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். பாண்ட்யா 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 110 ஓட்டங்களைப் பெற்றது இந்திய அணி.

ரவீந்திர ஜடேஜா 19 பந்துகளில் 2 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 26 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார்.

நியூசிலாந்தின் பந்துவீச்சில் ட்ரென்ட் போல்ட் 3 விக்கெட்களையும், இஸ் சோதி 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 14.3 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து 111 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

மார்ட்டின் குப்தில் 20 ஓட்டங்களையும், டரில் மிற்செல் 4 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 49 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர். கேன் வில்லியம்சன் 33 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார்.

இந்தியாவின் பந்துவீச்சில் ஜஸ்பிரித் பும்ரா 2 விக்கெட்களை கைப்பற்றினார்.

போட்டியின் நாயகனாக இஸ் சோதி தெரிவானார். (ஐ)

# நமீபியாவை வீழ்த்தியது ஆப்கானிஸ்தான் அணி!

அபுதாபி, நவ. 01

நமீபியா அணியை 62 ஓட்டங்களால் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி, குழு 2 பிரிவில் 4 புள்ளிகளுடன் இரண்டாவது இடம் பிடித்துள்ளது.

உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர் - 12 சுற்றில் நேற்று நடந்த போட்டியில் ஆப்கானிஸ்தான், நமீபியா அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்கம் கொடுத்த ஷாஷாய் - முஹமட் சஷாட் அதிரடியான இணைப்பாட்டம் கொடுத்தனர். பவர் பிளே வரை தாக்குப்பிடித்த இந்த இணை 53 ஓட்டங்களை சேர்த்த நிலையில், ஷஷாய் 4 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 33 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து வந்த குர்பாஷ் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் வந்த அஷ்கர் ஆப்கான் ஓரளவு பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். முஹமட் சஷாட் 3 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 45 ஓட்டங்களைப் பெற்றார். ஆப்கான் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 160 ஓட்டங்களை குவித்தது ஆப்கானிஸ்தான். முஹமட் நபி 5 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 32 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார்.

நமீபியாவின் பந்துவீச்சில் ருபென் ட்ரும்பெல்மன், ஜான் நிக்கோல் லொப்டி ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நமீபிய அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்களை இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணிக்காக டேவிட் வைஸ் 26, ஜான் நிக்கோல் லொப்டி 14, கெர்சார்ட் எராஸ்முஸ் 12, ருபென் ட்ரும்பெல்மன் 12 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

ஆப்கானிஸ்தானின் பந்துவீச்சில் நவீன் உல் ஹக், ஹமீத் ஹசன் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும், குல்பதின் நயீப் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

போட்டியின் நாயகனாக ஆப்கானிஸ்தானின் நவீன் உல் ஹக் தெரிவானார். (ஐ)













இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் :
டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்-சிங்கப் பெண்ணே
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
(மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-மேயாதமான்,டோரா
ஆகிய திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
06.30 மணி : நலந்தானா-வைத்தியர் மார்ஸ்
முத்துதம்பி



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்



10.00 மணி : நேருக்கு நேர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**ஐ நிதி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு சனி)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : விவிலியம் அறிவோம்
(திருகோணமலை) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு
04.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு) மறுஒளிபரப்பு
05.00 மணி: திருப்பலி (திருகோணமலை)
மறுஒளிபரப்பு
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
மறு ஒளிபரப்பு
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
மறு ஒளிபரப்பு

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு